455

Regd M. 1803. JUNE 1926 Vol, III—No 11.

லக்ஷ்மி

OFFICE OF THE REGISTRAR
28 JUL 1926
MADRAS

சொந்தக்கா

கே. எஸ். முத்தையா &

SARMA BROS

YEARLY SUBS. INLAND RS. 2

எக்ஸிபிஷன் பட்டுப் புடவை

இந்தப் புடவை பல பஹிரங்கப் பொருட் காக்ஷிகளுக்கு அனுப்பி மதிப்பு பெற்றது. புதிதாகத் தயார் செய்துள்ளது. அழகும் நாணயமும் உள்ளது. நாகரீகமான ஜரிகைப் பூக்கரையும், அழகான ஜரிகை முகதலையுமுள்ளது. எல்லா விதமான கலர்களிலும் கிடைக்கும்.

உடல் சாதாப் பு வை

12 முழம்	× 44	இஞ்சு புடவை 1-க்கு	. 40	முதல்	45	வரை
16 ,,	× 44	,,	,,	ரூ. 60	,,	75	,,
18 ,,	× 44	,,		ரூ. 75	,,	100	,,

உடல் பு புடவை

இந்தப் புடவை சொல்லிய விபரப்படி, கரைகளும் முகதலையும், உ கப் புட்டாக்களும் அடங்கியது. பார்வைக் யும் ரம்மியமாயுமிருக்கும்.

12 முழம்	×	-க்கு	ரூ. 60	முதல்	75	வரை
16 ,,	×	,,	ரூ. 80	,,	100	,,
18 ,,		,,	ரூ. 100	,,	120	,,

ம் அட்வான்ஸ் தாங்கள் பிரியப் து மேல் அனுப்பவேண்டும்.

தையா & கோ.

சில்க் ஹவுஸ்,

காசி.

OFFICE OF THE REGISTRAR
28 JUL 1926
MADRAS

நமது சொந்தப் பிரசுரங்கள்.

காசி அல்லது புண்ணிய பூமி

காசிமாநகரம் இன்று நேற்றுண்டான பட்டணமல்ல. 4000 வருடங்களுக்கு முற்காலந் தொட்டே பல்லோர் போற்றும் நல்லதோர் நகரமாய் விளங்கி வருகிறது. ஆகவே அதைப் பற்றிய வரலாறு இந்தியர்களுக் கெல்லாம் பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியதே இந்நூல் காசிமா நகரத்தின் சரித்திரத்தை சவிஸ்தாரமாகக் கூறுவது. காசிமா நகரத்தில் விசுவேசர் ஆலயம், முக்கிய கட்டடங்கள், வட மதுரை, பிருந்தாவனம், ஆலயங்கள் ஆகியதான 15 ஆப்டோன் சித்திரப் படங்கள் அடங்கியது. உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் திருத்தமுற அச்சிடப் பெற்றது. விலை அணா 12.

மணிவடக் களவு :—பட்டப் பகலில் போலீசார் முன்னே ஒரு இரத்தின மாலையைத் திருடி மறைந்த ஒரு சுந்தரமாதின் தந்திரச் செயல்களை விளக்கும் ஒரு அற்புதமான துப்பறியும் கதை. விலை அணா 4.

பங்கஜம் :—இது ஒரு அழகிய சிறு கதை. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டது. வயது முதிர்ந்தவர்கள் இளம் பெண்களை விவாகம் செய்வதால் ஏற்படும் இடுக்கண்களை விரிவாக எடுத்துக் கூறுவது. விலை அணா 2.

குயில்மொழி :—ஒரு சிறுமியைப் பற்றிய சிறப்பான கதை. தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகளுக்கு இதைவிட் மனவெழுச்சியைக் கொடுக்கக் கூடிய கதை இல்லவே இல்லை. விலை அணா 2.

எனது காங்கிரஸ் யாத்திரை :—இந்தியாவின் சுதந்திரத்தை விரும்புவோ ரெல்லாம் அவசியம் படித்தரிய வேண்டிய நூல். தற்காலத் தேசாபிமானிகளின் தன்மையை வெட்டனத் திறந்து காட்டுவது. அழகிய நடை. விலை அணா 3.

லக்ஷ்மி தாலாட்டுக் கோவை :—நான்கு விதத் தாலாட்டுகள் அடங்கியது. தமிழ் நாட்டுத் தாய்மார்களுக்கு ஏற்றது. விலை அணா 3.

பழமொழித் திரட்டு :—பண்டைக்காலந் தொட்டே தமிழ் நாட்டில் வழங்கும் பழமொழிகளில் சிறந்தவைகளை ஒன்றாகத் திரட்டி அச்சிடப் பெற்றது. விலை அணா 3.

லக்ஷ்மி புஸ்தக சாலை, தபால் பெட்டி நே. 99, மதராஸ்.

நடராஜப் பத்து :—நடராஜப் பத்து, நடராஜர் பதிகப் பஞ்சகம், தில்லை நடராஜர் பதிகம், இம் மூன்றும் ஒரே புத்தகத்தில் சந்தி பிரித்து கிளேஸ் கடிதந்தில் திருத்தமுற அச்சிடப் பட்டது. விலை அணு 2.

கந்தரலங்காரம் :—இதில் கந்தரலங்காரம், கந்தர் சஷ்டி கவசம், சத்ருசங்கார வேற்பதிகம், அகத்தியப் பஞ்சகம் முதலியவைகள் அடங்கி இருக்கிறது. கிளேஸ் கடிதம். விலை அணு 4.

ராவ்சாஹிப் P. சம்பந்த முதலியார் அவர்கள் B.A., B.L., இயற்றிய மிகவும் சிறந்த தமிழ் நாடகப் புஸ்தகங்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
லீலாவதி சுலோசனு	0	12	வேதாள உலகம்	0	10
மனோகரன்	0	12	அமலாதித்யன்	1	0
கள்வர் தலைவன்	0	12	விரும்பிய விதமே	1	0
சுந்தரி	0	12	பொன் விலங்குகள்	0	10
இரண்டு நண்பர்கள்	0	14	பிரஹசனங்கள்	0	8
ஹரிச்சந்திரன்	1	0	ரஜபுத்ர வீரன்	0	8
புத்தர்	1	0	நற்குல தெய்வம்	0	8
பேயல்ல பெண்மணியே	0	8	சாரங்கதரன்	0	8
காலவ ரிஷி	0	8	சிறுத்தொண்டர்	0	8
யயாதி	0	8	கீதமஞ்சரி Part 1.	0	8
ஊர்வசி சாபம்	0	8	வள்ளி	0	12
மார்க்கண்டேயர்	0	10	சந்திரஹரி	0	8
சபாபதி 1 & 2	1	0	ரத்னுவளி	0	14

S. S. வாசன் இயற்றிய நாவல் புஸ்தகங்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
லக்ஷ்மீகாந்தன்	2	0	ஜிநேந்திரன்	1	8
ஆனந்த மேகன்	1	8	மதுராம்பாள்	0	12

ராவ்சாஹிப் T. M. பொன்னுசாமி பிள்ளை அவர்கள் இயற்றிய சிறந்த நாவல்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
கமலாக்ஷி	1	12	சிவஞானம்	1	4
ஞானும்பிகை	1	8	ஞானசம்பந்தம்	1	4
ஞானப்பிரகாசம்	1	8	விஜயசுந்தரம்	2	8

பண்டித நடேச சாஸ்திரியார் அவர்கள் இயற்றிய புஸ்தகங்கள்

திக்கற்ற இரு குழந்தைகள்	1	8	வசந்தியோத்தியானம்	3	0
தானவன்	0	12	தீனதயாளு	0	12
தக்காணத்துப் பூர்வகதை	1	4	தலையணை மந்திரம்	1	0

லக்ஷ்மி புஸ்தக சாலை, தபால் பெட்டி நே. 99, மதராஸ்.

ஜே. ஆர். ரேங்கராஜு நாவல்கள்.

	ரூ. அ.			ரூ. அ.
ராஜாம்பாள்	0 12		ஆனந்த கிருஷ்ணன்	0 12
சந்திரகாந்தா	0 12		விஜயராகவன் (புதியது)	1 0
மோகன சுந்தரம்	0 12		புதிய நாவல் வரத ராஜம்	1 0
ராஜேந்திரன்	1 0			

S. S. அருணகிரி நாதரால் எழுதப்பட்ட நாவல்கள்.

	ரூ. அ.			ரூ. அ.
குமுதரஞ்ஜனி or கொலையும்களவும்	0 12		வஸந்தா or வீரகேசரியின் விநோதச் செயல்கள்	1 12
கனகமணி அல்லது கள்ளச் செயல்கள்	2 12		பத்மாக்ஷி	2 0
வீரகேசரி	1 12		சரோஜனி	2 0
இராஜ ராஜேஸ்வரி	1 8		அமிர்தகுமாரி	1 4
அமிர்த சாகரன்	1 3		அமரநாதன்	1 8

மணவாழ்க்கையின் மர்மங்கள்.

இஃது தகுந்த ஆயுர்வேத, ஆங்கில, மேற்கொள்கைகளைக் கொண்டு, மேலோரின் குடும்ப வாழ்க்கையில் சாஸ்திரோக்தம் போல் எழுதப்பட் டிருக்கும் குடும்ப ரகஸ்ய இன்ப நூலாகும். ஏராளமான பிரதிகள் விலையாகிவிட்டன. முன் வெளியிடப் பட்ட "கோக்கோகக் கோலம்" என்னும் நூலின் விரிவு நூல்.

விலை ரூ. 2—4—0.

பரிமளா :—தமிழுலகெங்கும் பெயர் பெற்றது. பிரஜானுகூலன் பத்திராதிபர் எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு அவர்கள் எழுதிய ஒரு துப்பறியும் நாவல். ஆசிரியர் பெயரும் அவர்களது நூல்களின் பெருமையும் தமிழ் நாட்டார் நன்கறிவர். ஆகையால் இந்நூலின் சிறப்பை விரிவாகக் கூறவில்லை. விலை ரூ. 1.

மனோஹரி :—இது பெயருக் கேற்பவே ஒரு மனோஹரமான நாடகம். கற்பின் மகிமை, புருஷ தம்பதிகளின் சுகவாழ்வின் ரகசியங்கள், இல்லற தருமங்கள் முதலியன இதில் தெளிவுற விளக்கப் பட்டுள்ளன. விலை அணா 8.

பரம்பரமானந்தன் :—தேச பக்தியைப் புகட்டும் ஓர் சிறந்த நவீனம். புத்தகத்தை கையில் எடுத்தால் படித்து முடிக்காமல் கீழே வைக்க மனம் வராது. 250 பக்கம். விலை ரூ. 1.

லக்ஷ்மி புஸ்தக சாலை, தபால் பெட்டி நே. 99, மதராஸ்.

சந்திரரேகா

இது சரித்திர சம்பந்தமான நாவல் கதைப்போக்கின் இடையே 'மாமிச போஜன மறுப்பு,' 'ஸ்நானவிதி,' 'கணிகைகளின் இயல்பு,' 'கல்வி' முதலிய பல அரிய விஷயங்கள் வியாச ரூபமாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2 0 0.

கனகாங்கி அல்லது கழுகுமலைக் கள்வன்

இது ஸ்ரீமான் நாகை. சொ. தண்டபாணிப் பிள்ளையவர்கள் எழுதிய அரிய துப்பு அறியும் ஓர் நாவல். ஆரம்பமுதல் முடிவு வரையில் உள்ள ஒவ்வொரு பகுதியும் வாசகர்கள் மனதைக் கவரத் தக்கதே. விலை ரூ. 2 0 0.

வர்த்தக யுக்தி :—'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ரூர் ஔவையார். பொருளீட்டுவதற்கு வர்த்தகத்தைப் போல் சிறந்த தொழில் ஒன்றுமில்லை. ஆனல் தராசுக்கோலும் படியும் எடுத்தவ ரெல்லாம் வர்த்தகராக மாட்டார். டாக்டர், வக்கீல், இஞ்சினீயர் முதலியோர் அவ்வத் தொழிலுக்கு லாயக்கடைய எவ்வளவோ காலம் படித்துத் தேர்ச்சியடைகிரூர்கள். தற்கால வர்த்தகத்துக்குக் கற்றுக்கொள்ள வேண்டிய முறைகளும் விதிகளும் அநந்தம் உள்ளன. அவற்றை யெல்லாம் ஒன்ருகத் திரட்டி இந்நூல் விளக்கிக் கூறுகின்றது. தமிழ் நாட்டு வர்த்தகர் அவசியம் வாசித்தறிய வேண்டியது. விலை அணு 12.

ஜயலட்சுமி

கதாநாயகி ஒரு யௌவன புருஷனைக் காதலித்துக் கொண்டிருக்கையில், தாய் தந்தையர் அவளைப் பணத்தாசையால் ஒரு கிழவனுக்கு மணம் செய்விக்கப் பிரயத்தனப்படுவதும், கதாநாயகி பலவித கஷ்டங்களுக்குள்ளாகி கடைசியில் "ஜயலக்ஷ்மி" என்னும் பட்டம்பெற்று தான் காதலித்த முருகக் கவுண்டரையே மணம் செய்துகொண்டு சுகித்திருப்பதும் படிப்பவர் மனதைப் பரவசப் படுத்தும். விலை ரூ. 0 10 0.

விலாசவதி

அல்லது

உண்மைக் காதலியே உயர்ந்த செல்வம்

அன்பும், விசுவாசமுமுள்ள உண்மையான மனைவி, ஒருவனுக்கு வாய்க்கும் பக்ஷத்தில் அவனல் நடத்தப்படும் இல்லரமையையும், ஒருவனுக்கு அடங்காத பிள்ளை வாய்க்குமானல் அப்பிள்ளையால் குடும்பத்திற்கு வரும் கேடும் விரிவாய் விளக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகள் முதல் பெரியோர் வரையில் எல்லோரும் வாசிக்கக் கூடிய எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. சித்திரப்படங்களுமுண்டு. விலை ரூ. 0 8 0

லக்ஷ்மி புஸ்தக சாலை, தபால் பெட்டி நெ. 99, மதராஸ்.

ஆரணி. குப்புசாமி முதலியார் இயற்றிவை.

	ரூ.	அ.		ரூ.	அ.
பவளத்தீவு	1	6	வீரநாதன்	0	12
தபால் கொள்ளைக் காரர்கள்	0	14	கமலசேகரன்	1	12
இந்திராபாய்	2	8	தினகர சுந்தரி	1	0
மஞ்சள் அறையின் மர்மம்	1	8	இரத்தினபுரி ரகசியம் (2 பாகம்)	4	0
கற்கோட்டை	2	0	மதனபூஷணம்	1	0
பூங்கோதை	0	10	சுவர்ணம்பாள்	0	12
குணசுந்தரன்	0	12	தேவசுந்தரி	1	4
பத்மாசனி	0	14	சகோதரவாஞ்சை	0	6
மின்சார மாயவன்	1	8	சங்கநிதி	0	12
குலசேகரன்	1	0	அயாஷா (2 பாகம்)	1	12
சுந்தர் சிங்	1	8	அந்தப்புரக் காதல்	1	4
உமர்பாஷா	2	8	மாண்டி கிரிஸ்டோ (2 பாகம்)	3	0
புஷ்பவனம்	0	14	லண்டன் திருடர்கள் (2 பாகம்)	2	12
அம்புஜாக்ஷி	2	0			
சீனிவாசன்	0	6			
இந்திராணி	1	4	இரங்கநாயகி	1	4
மூன்று வைரங்கள்	0	6	கோகர்ஜான்	0	10
கமலநாதன்	1	8	பத்மநிதி	0	10
பத்மலோசனி	0	12	தாக்ஷாயணி	0	6
			மதனகாந்தி	1	8
கனகபூஷணம் (2 பாகம்)	3	8	வரதசுந்தரம்	2	0

தமிழ்ச் சட்டப் புஸ்தகங்கள்.

ஸ்டாம்பு, ரெஜிஸ்ரேஷன் பலவிதப் பத்திரங்கள் எழுதும் மாதிரிகள் அடங்கிய விவகார சிந்தாமணி	2—8—0
உயில் பாகம், வார்சு பாத்தியம், ஸ்திரீதன முதலியதுள்ள பெரிய ஹிந்து லா	2—0—0
சிவில் விவகாரம் பூர்த்தியாய் அடங்கிய சிவில் லா ...	3—0—0
போலீஸ் மாஜிஸ்ட்ரேட் சம்பந்தமான க்ரிமினல் லா ...	3—0—0
புது கிராம முனிசிப் சட்டம் ...	1—8—0
கிராம பஞ்சாயத்து சட்டம் ...	1—2—0
லோகல் போர்டு ஆக்ட் ...	1—8—0
குற்ற சம்பந்தமான இந்தியன் பினல் கோட் ...	3—0—0
எவிடன்ஸ் ஆக்ட் ...	1—0—0
ஹிந்து தர்ம ஸ்தாபன சட்டம் ...	1—0—0
டிரஸ்ட்டி ஆக்ட் ...	0–10—0

லக்ஷ்மி புஸ்தக சாலை, தபால் பெட்டி நெ. 99, மதராஸ்.

		ரூ. அ. ப.
கிராம சுகாதாரம்	...	0—2—0
நில ஆக்ரயிப்பு சட்டம்	...	0—4—0
கால நிர்ணய ஆக்ட்	...	0—8—0
புதிய ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	...	0–10—0
பரம்பரை கிராம உத்தியோக ஆக்ட்	...	0–10—0
புது இன்கம் டாக்ஸ் சட்டம்	...	1—0—0
புதிய ஸ்டாம்பு ஆக்ட்	...	0–12—0

வேதாந்த சித்தாந்தப் புஸ்தகங்கள்.

	ரூ.	அ.
ஸ்ரீ பகவத் கீதை வசனம்	1	8
,, விசார சாகரம்	3	4
,, விருத்திப் பிரபாகரம்	5	0
பிரபோத சந்திரோதய வசனம்	1	0
ஒழிவி லொடுக்கம் உரையுடன்	1	4
பிரபுலிங்க லீலை வசனம்	1	0
அகம்புர ஆராய்ச்சி விளக்கம்	1	4
மாயா வாத சைவ சண்ட மாருதம்	1	0
ஸ்ரீ சங்கர விஜயம்	1	4
,, ராமாநுஜ விஜயம்	2	0
,, விவேகானந்த விஜயம்	1	12
ஷெடியார் விரிவான சரித்திரம்	2	0
பெரிய புராண, திருவிளையாடல் புராண வசனச் சுருக்கம்	1	4
ஆத்திசூடிப் புராணம் உரையுடன்	2	0
ஸ்ரீ அருணாசல புராண வசனம்	1	8
அரிச்சந்திரபுராண வசனம்	1	8
சிவக்ஷேத்திர விளக்கம்	1	8
தேவார திருவாசகத் திரட்டு	0	8
அகஸ்தியர் தேவாரத் திரட்டு உரை	1	4
தண்டியலங்காரம் உரையுடன்	1	12
கல்லாடம் மூலமும் உரையும்	3	0
நளவெண்பா மூலமும் உரையும்	1	8
பிங்கல நிகண்டு மூலமும் உரையும்	2	8
திருக்குறள் மூலம்	0	8
நாலடியார் மூலமும் உரையும்	2	0
ஆத்திசூடி வெண்பா உரையுடன்	1	0
திருவள்ளுவர் சரித்திரம்	3	0
திலகர் விசாரணை (சரித்திரத்துடன்)	0	12
ஸ்ரீ விவேகாநந்தர் சரித்திரம்	2	0
,, ராமகிருஷ்ண பரமஹம்சர் சரித்திரம்	2	0
,, சங்கராசாரியார் சரித்திரம்	1	4
,, ராமாநுஜர் சரித்திரம்	2	0
,, மத்வாசாரியார் சரித்திரம்	1	0

லக்ஷ்மி புஸ்தக சாலை, தபால் பெட்டி நெ. 99, மதராஸ்.

நாவல் எழுதுவதில் பெயர் பெற்ற

வடுவூர்-கே. துரைசாமி ஐயங்கார் B. A.

அவர்களால் எழுதியவை.

		ரூ.	அ.
மாயாவிநோதப் பரதேசி	1-ம் பாகம் } 2-ம் பாகம் }	5	0
ஷை			
விலாஸவதி	1-ம் பாகம்	1	8
ஷை	2-ம் பாகம்	1	8
மதனகல்யாணி	1-ம் பாகம்	1	8
ஷை	2-ம் பாகம்	1	8
ஷை	3-ம் பாகம்	1	8
பூர்ண சந்திரோதயம்	1-ம் பாகம்	1	12
ஷை	2-ம் பாகம்	1	12
ஷை	3-ம் பாகம்	2	0
ஷை	4-ம் பாகம்	2	0
சௌந்திர கோகிலம்	1-ம் பாகம்	1	8
மேனகா	1-ம் பாகம்	1	8
ஷை	2-ம் பாகம்	1	8
கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பர சாமியார்	1-ம் பாகம்	1	8
ஷை	2-ம் பாகம்	1	8
பாலாமணி அல்லது பக்காத் திருடன்		2	8
வஸந்த மல்லிகா		1	8
வித்தியாசாகரர்		1	4
திலோத்தமா		0	12
மாணிக்கவாசகர்		0	8
கனகாம்புஜம் அல்லது கள்வனும் விலை மகளும்		2	12
வஸந்த கோகிலம்		1	0
மாயாசுந்தரி		0	12

லக்ஷ்மி புஸ்தகசாலை,

தபால் பெட்டி நெ. 99, மதராஸ்.

ஸ்ரீமத் பாகவதம்

(கிரந்த அக்ஷரத்தில்)

பூஜிப்பதற்கும், பாராயணஞ் செய்வதற்கும், உபயோகமுள்ளதும் ஸ்ரீ வேதவியாஸ மஹரிஷிகளால் இயற்றப்பட்டதும், பகவத் குணகணங்கள் நிறைந்ததும், சித்த சுத்தியைக் கொடுத்து மோக்ஷ சாம்ராச்சியத்தை அளிக்கக்கூடியதுமான ஸ்ரீமத் பாகவதம் 12-ஸ்கந்தங்களும் ஸ்ரீதரீயம், முக்கியமான இடங்களில் வீரராகவீயம், சந்திரிகை, முனிபாவப் பிரகாசிகை முதலிய நான்கு வியாக்கியானங்களுடன், உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அழகான கிரந்த லிபியில் டிம்மி 8-பக்க அளவில் சுமார் 420-பாரம் அதாவது 3360-பக்கங்கள் அச்சிட்டு, காலிகோ அல்லது பூஜார்கமான கித்தான் பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. 12-ஸ்கந்தங்களின் விலை ரூபா 20.

ஒரே சமயத்தில் 5-செட் புஸ்தகங்கள் வாங்குகிறவர்களுக்கு ஒரு செட் புக் இனமாய் கொடுக்கப்படும்.

புஸ்தகத்துக்கு ஆர்டர் செய்கிறவர்கள் புஸ்தகத்தின் கிரயத்தில் நான்கில் ஒரு பங்கு அட்வான்சாக அனுப்பவேண்டும். புஸ்தகம் அதிக பளுவாயிருப்பதால் தபாலில் அனுப்பினால் செலவு ஜாஸ்தியாகும். ரெயில் மூலமாயனுப்பினல் செலவு குறையும். ஆகையால், அவரவர்கள் தங்களிருப்பிடத்துக்கு சமீபமாயுள்ள ரெயில்வே ஸ்டேஷனை எழுதியனுப்ப வேண்டும்.

தேவையுள்ளவர்கள் எங்களிடம் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

லக்ஷ்மி புஸ்தகசாலை,
தபால் பெட்டி நெ. 99,
மதராஸ்.

பச்சை மோதிரத்தின் மர்மம்

The Mystery of the Emerald Ring

இது ஓர் அருமையான இனிய துப்பறியும் நாவல். இதைப் படிக்க ஆரம்பித்துவிட்டால் மனம் வேறெந்த ஜோலியையும் நாடாது, கதையின் போக்கு மிகவும் இனிமையாய் இருக்கும். இதைப் படிக்கும்போது சில இடங்களில் திடீரென சிரிப்பையும், ஆனந்தத்தையும் படிப்பவர்களுக்கு மனதில் ஓர்வித உற்சாகத்தையும் கொடுக்கும். சில இடங்களில் திடீரென மனங்கலங்கி ஓர் ஆச்சர்யத்தைக் கொடுத்து பலவித எண்ணங்களை யோசிக்கச் செய்யும். 224 பக்கங்களை உடையது.

இந்தப் புஸ்தகத்தை நாவல் பிரியர்கள் முதலில் வருத்திப் படித்துப் பார்த்து, மறுபடியும் ஒவ்வொருவர்களும் 5, 6 புஸ்தகங்கள் வருத்துகின்றார்கள்.

இதன் விலை ரூபாய் 1—0—0.

6 புஸ்தகங்கள் வருத்துபவர்களுக்கு ரூ. 1-க்கு அணா 4 கமிஷன் கொடுக்கப்படும். டசன் கணக்கில் வருத்துபவர்களுக்கு ரூ. 1-க்கு அணா 0–5–3 கமிஷன் கொடுக்கப்படும்.

உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

LAKSHMI BOOK DEPOT,

188, Govindappa Naick St.

MADRAS.

லோகோபகாரி.

தமிழ் நாட்டில் பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகை. முப்பத் திரண்டாவ தாண்டு இப்பொழுது நடக்கிறது. பாலி சு. நெல்லையப்ப பிள்ளை இதன் ஆசிரியர். தாங்கள் இதுவரை சந்தாதா ராகா விட்டால் உடனே எழுதுங்கள்.

வருட சந்தா ரூபா 4.

மாதிரிப் பிரதி இனும்.

'லோகோபகாரி'

பத்திரிகாலயம்,

கோமளேசன் பேட்டை,

சென்னை.

உங்கள் புத்தகசாலை பூர்த்தி யாகாது?

லக்ஷ்மி இதழ் 12-ம் காலிகோ பைண்டு செய்யப்பட்டு, கில்ட்டு எழுத்துடன் கூடிய 'லக்ஷ்மி' மலர் ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள். 800 பக்கங்கள் 30 படங்கள் உள்ளது. புஸ்தகம் வைத்துக் கொள்வதற்கு அழகான பெட்டியுடன் விலை ரூ. 3.

தபாற் செலவு வேறு.
சொற்பக் காபிகளே கைவசமுள்ளன.
முந்துங்கள்.

நமது புதிய பிரசுரங்கள்

	ரூ.	அ.		ரூ.	அ.
காசி அல்லது புண்ணிய பூமி ...	0	12	நடராஜப்பத்து ...	0	2
மனோஹரி ...	0	8	பங்கஜம் ...	0	2
பரிமளா ...	1	0	குழில் மொழி ...	0	2
மணிவடக்களவு ...	0	4	கனவுப் பொடி ...	0	2
கந்தரலங்காரம் ...	0	4	எனது காங்கிரஸ் யாத்திரை ...	0	3
தாலாட்டுக்கோவை ...	0	3	வர்த்தக யுக்தி ...	0	12
பழமொழித்திரட்டு ...	0	3	கண்ணகியின் சாபம் ...	0	8

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ், தபால் பெட்டி 99, சென்னை.

ஓர் வேண்டுகோள்

நேயர்களே !

வந்தனம், நாங்கள் சுமார் மூன்று வருட காலமாக நடத்திவரும் "லக்ஷ்மி புஸ்தகசாலை"யில் இப்பொழுது ஏராளமாக எல்லா விதத் தமிழ்ப் புஸ்தகங்களும் வைத்திருக்கிறோம். ஆகையால் தங்களுக்கு வேண்டிய தமிழ் நாடகப் புஸ்தகங்கள், நாவல்கள், இராஜீய நூல்கள், மத சம்பந்தமான புஸ்தகங்கள் இன்னும் வேண்டிய இதர புஸ்தகங்களுக்கும் எங்கள் புஸ்தக சாலைக்கே ஆர்டர் செய்யுங்கள்; உடனுக்குடன் அனுப்பிக் கொடுக்கிறோம்; வெளியூர்களிலுள்ள சந்தா நேயர்களும் மற்றுமுள்ள நேயர்களும் ஆர்டர் அனுப்பும் சமயம் தாங்கள் விரும்பும் தொகை அட்வான்ஸ் அனுப்பவேண்டும். ஆகையால் இது முதல் உள்நாடு, வெளிநாடுகளிலுள்ள நமது சந்தா நேயர்களும் மற்றுமுள்ள நேயர்களும் நமது லக்ஷ்மி புஸ்தக சாலைக்கே ஆர்டர் செய்வீர்களென்று நம்புகிறோம்.

புஸ்தகசாலை விலாசம் — மானேஜர்

லக்ஷ்மி புஸ்தகசாலை — லக்ஷ்மி ஆபீஸ்.

188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.

இல்வாழ்க்கையின் லட்சணங்களை அறிந்து இன்பமடைய வேண்டுமானால் கீழ்க்கண்ட புஸ்தகங்களைப் படித்துத்தான் ஆகவேண்டும்.

	ரூ.	அ.		ரூ.	அ.
மணவாழ்க்கையின் மர்மங்கள்	2	4	மதனரதி ரஹஸ்யம்	1	0
ஸ்திரீபுருஷ ரகசியம்	1	8	ரதிமதன சிருங்கார ரஹஸ்யம்	1	0
சரீர மர்மசாஸ்திரம்	1	0	மனோவசிய சாஸ்திரம்	1	8
சதிபதிகளின் மர்மம்	1	0	கர்ப்ப சாஸ்திரம்	1	8

விலாசம்:—

வாஸன் புஸ்தகசாலை

97, அண்ணாபிள்ளைத் தெரு,

ஜி. டி. மதராஸ்.

ஓம்

OFFICE OF THE REGISTRAR
28 JUL 1926
MADRAS

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

பத்திராசிரியர் . க. ச. சுந்தரம் பிள்ளை.

மலர் ரு. { அக்ஷய வரு ஆனி மீ 1926 ஜூன் மீ } இதழ் கக.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	527
2.	சந்தாநேயர்களுக்கு அறிவிப்பு ...	528
3.	வாக்கிற் கருணகிரி	529
4.	சமண நன்மக்கள்	531
5.	தாமிரபர்ணியும் தாமிரமும்	534
6.	விக்கிரக ஆராதனை	539
7.	விக்கிரக வணக்கத்தின் விசிட்டம் ...	541
8.	விஜயா	543
9.	பானுபாய்	545
10.	அன்பு	550
11.	பாரிஜாதப் பரிமணம்	552
12.	மாலைப்பொழுது	556
13.	சிட்டானு குமாரன்	560
14.	இன்கவித் திரட்டு	567
15.	பொது விஷயங்கள்	570
16.	விநோதச் செய்யுட்கள்	572

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
21039

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாடுகளுக்கு வருடம் 1-க்கு இந்தியா, பர்மா, சிலோன் ...	ரூ. 2 0
வெளி நாடுகளுக்கு வருடம் 1-க்கு சிங்கப்பூர், பிணங்கு, மோரீஸ்,	ரூ. 2 8

தனிப்பிரதி அணா 3.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு ஆங்கில மாத முடிவிலும் வெளியாகும் என்ற விஷயத்தை நேயர்கள் கவனிப்பார்களாக. பத்திரிகை கிடைக்காதவர்கள் மறுமாதம் 10வுக்குள் சந்தா நம்பருடன் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்கு மேல் கவனிக்கப்பட மாட்டாது.

மானேஜர்.

நமது லக்ஷ்மி கிடைக்கும் இடங்கள்

[தனிப் பிரதி அணா 3-வீதம் பெற்றுக் கொள்ளலாம். சந்தா நேயராகச் சேர விரும்புபவர்கள் கீழ்க் கண்ட 2,3,4,5,6, லக்கமிட்ட விலாசக்காரர்களிடமும் V.P. ஆர்டராவது, ரூ. 2. செலுத்தியாவது தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளலாம்]

1. மதராஸ் சென்டரல் ஸ்டேஷனிலும், மற்றுமுள்ள தென்னிந்தியா ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள ஹிக்கின் பாதம் (Higginbotham) புத்தக சாலைகள்.

2. K. S. முத்தையா அண்டு கம்பெனி, திருநெல்வேலி ஹைரோடு, திருநெல்வேலி.

3. S. சுப்பிரமணியம் செட்டியார், நெரியுனேத் தோட்டம், நிவிட்டிக்கோளை, சிலோன்.

4. T. S. சேது மாதவ ராவ், ஆர்ய வைசிய காசுக்கார ஸரஸ்வதி சங்கம். 94, மேலச் செட்டித் தெரு, தெற் காவணி மூலவீதி, மதுரை.

5. C. லக்ஷ்மணன் 18, கோவிந்த முதலி தெரு, கஸ்பா வேலூர்.

6. S. K. சாமி, கமிஷன் ஏஜண்டு ELA. Po-(பர்மா.)

210359

லக்ஷ்மி துதி

உளங்கொண்ட பேரருள் எத்தனை
தேவர் உறச் செயினுந்
தளங்கொண்ட தாமரையாள் அருள்
இன் றெனிற் சஞ்சலமே
களங்கொண்ட நஞ்சன் முதலாய
தெய்வக் கணங்களு மவ்
வளங்கொண்ட லாத்தினம் புண்பட்ட
வாம்பல வானுளவே.

OFFICE OF THE REGIS
28 OCT 1926

சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு

நமது லக்ஷ்மியின் நான்காம் ஆண்டு வருகிற ஆகஸ்டு மாதம் பிறக்கப் போகிறது. ஆகையால் சந்தா நேயர்கள் சந்தாத் தொகையை ஜூலை மாதம் 15உக்குள் மணியார்டர் மூலம் செலுத்தி விடக் கேட்டுக் கொள்கிறோம். மேற்படி தேதிக்குள் தொகை யனுப்பாத சந்தா நேயர்களுக்கு இப்பொழுது நடந்துவரும் மலரின் 12-ம் இதழ் (Vol 3. No 12. மலர் 3. இதழ் 12) V.P. யில் அனுப்பப்படும். பணம் அனுப்பிய நேயர்களுக்கு இதழ் 12-ம் நான்காம் ஆண்டின் முதல் இதழ் முதலும் சாதாரண புக் போஸ் டாக அனுப்பப்பட்டு வரும். நான்காம் ஆண்டுக்கு லக்ஷ்மியை வரவழைக்க இஷ்டமில்லாதவர்கள் தயைசெய்து ஒரு கார்டு மூலம் ஷை ஜூலை மாதம் 15உக்குள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிடக் கேட்டுக் கொள்கிறோம். அவர்களுக்கு 12-ம் இதழ் மட்டும் சாதாரண புக் போஸ்டில் அனுப்பி நான்காம் ஆண்டு முதல் இதழிலிருந்து நிறுத்தி விடப்படும். அப்படி மேற் கண்ட தேதிக்குள் மணியார்டராவது கார்டாவது அனுப்பாத நேயர்கள் லக்ஷ்மியை V.P.யில் பெற்றுக் கொள்ளலா மென்ற இஷ்டத்துடன் இருக்கிறார்கள் என்று கருதப்பட்டு V.P. மூலம் சந்தாத் தொகை ரூ. 2. ஸ்டாம்பு செலவு அணா 2. ஆகத் தொகை ரூ. 2—2—0 க்கு லக்ஷ்மியை அனுப்புவோம். அது நேயர்களுக்கு கிடைக் கும்பொழுது தபாலாபீஸார் அவர்கள் சட்டப்படி இரண்டணாக் கமிஷன் சேர்த்து மொத்தமாக ரூ. 2—4—0 வசூலிப்பார்கள். சந்தா நேயர்கள் தொகையை மணியார்டரில் அனுப்பினால் இரண்டணா மணியார்டர் கமிஷன் சேர்த்து ரூ. 2—2—0 தான் ஆகும், இதிலிருந்து லக்ஷ்மியை V.P.யில் பெறுவதைவிட மணியார் டர் செய்வதனால் இரண்டணா லாபம் கிடைக்கிறது. அப்படி நேயர்களுக்கு லாபம் கிடைப்பது எங்களுக்குச் சந்தோஷத்தையும் கஷ்ட மில்லாமையையும் கொடுக்கிறது.

வெளி தேசங்களிலுள்ள சந்தா நேயர்களுக்கு புக் பாக்கெட் V.P. கிடையா தாதலால் அவர்கள் ஆகஸ்டு மாதம் 25உக்குள் எங்களுக்கு கிடைக்கும்படியாக சந்தாத் தொகை ரூ. 2—8—0 மணியார்டரில் அனுப்பிவிடக் கேட்டுக் கொள்கிறோம். அப்படி கிடைக்கா விட்டால் நான்காம் ஆண்டு முதல் லக்ஷ்மி நின்றுவிடும்.

மானேஜர்,

லக்ஷ்மி ஆபீஸ்.

வாக்கிற் கருணகிரி

ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள், M.A.
எழுதியது.

வாக்கிற் கருணகிரி வாதவூ ரார் கனிவில்
தாக்கிற் றிருஞான சம்பந்தர்—நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற் குறுதிக் கப்பரெனச் சொல்.

"திருப்புகழ்" என்னுஞ் சந்தப் பாடல்களைத் திருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளின் திருவாக்கின் பெருமை எத்துணைச் சிறப்புளது என்பது "வாக்கிற் கருணகிரி" என வழங்கும் தனிப் பாடலால் விளங்குகின்றது. எக்காரணத்தால் இவருடைய வாக்கு மேன்மை யுற்றது என்பதை ஆராய்வோம். வாக்கின் பெருமைக்கு ஆதாரமாவன சொல்லழகு, சொல்லமைப்பு, பொருளழகு, பொருளாழம் முதலியன. செஞ்சொற்களைக் கோத்துப் பொருள் படச் சிறக்கக் கூறுவது அருமை. அதனினும் மிக அருமை செவிக்கின்பந் தரக்கூடிய செஞ்சொற்களைப் பொருள் சிறக்கச் சந்தம் பொலியப் பாடலாக அமைப்பது. நன்று. சந்தம் நிறைந்த அரிய பாடல்களை அநேகர் பாடியிருக்கின்றார்களே. அவை ஏன் பிரபலமாக இல்லை? அருணகிரி நாதருடைய சந்தப் பாடல் மாத்திரம் ஏன் சிறப்புற்றுளது எனின், இவர் இறைவன் திருவருள் பெற்ற பெரியார். ஆண்டவன் அருள் பெற்றார் பாடலின் உயர்நிலை எக்காலத்தும் தனித்து விளங்குந் தன்மையது. உதாரணமாகத் திருவாசகத்துக்கு எங்ஙனம் பெருமை ஏற்பட்டது? மிக எளிதில் உணரக்கூடிய சொற்களைத் தாமே ஸ்ரீ மாணிக்கவாசகர் உபயோகப்படுத்தியுள்ளார்? அவர் வாக்கு நமது மனத்தை ஏன் உருக்குகின்றது. "கடவுளே போற்றி என்னைக் கண்டுகொண் டருளு போற்றி" என்னும் திருவாசக அடியில் பொருள் விளங்காத சொல் ஏதேனும் உளதா? இல்லையே! இவ்வடி எவ்

வளவு இன்பம் பயக்கக் கூடியதா யிருக்கின்றது? இதற்குக் காரணம் என்ன! என வினவின் மேற்கூறிய 'கடவுளின் திருவருள்' இவர் பாடலிற் கலந்துள்ளமையே. இதனால் தான் "அருள் வாக்கு" என்பது என்றும் எங்கும் இன்பம் பயப்பதாய் விளங்குவது. இறைவன் திருவருள் நிரம்ப நிரம்ப வாக்கின் பெருமை பெரிதும் பெரிதும் விரியும். இறைவன் திருவருளையே நாடித் தம்மை மறந்து பாடும் இடத்து வாக்கு மிக எளிதாகவும் சிறப்பாகவும் அமையும். "யான், எனது" என்பதை அறவே நீக்கிப் பாடியுள்ள காரணத்தாற்றான் திருவாசகம் திருப்புகழ் முதலியன திகழ்ந்து பொலிகின்றன. திருப்புகழ் சந்தப்பாக்களால் அமைந்துள்ள காரணத்தால் மனத்தைக் கவருவதுடன் செவிக்கும் மிக இன்பந் தருகின்றது. வாக்கின் பெருமைக்கு அங்கமான கனிவு, நயம், நோக்கு, உறுதி முதலியன பலவும் நமது அருணகிரியார் திருவாக்கிற் செறிந்துள என்பது யாவரும் அறிந்த விஷயம். உதாரணமாக இரண்டொரு அடிகள் கீழ்க் காட்டுவோம்.

"முருகா எனவோர் தரமோ தடியார்
முடிமே லிணைதாள் அருள்வோனே"

"இறந்திட்டுப் பெறவேகதி யாயினும்
இருந்திட்டுப்பெற வேமதி யாயினும்
இரண்டிற் றக்கதொ ருதியம் நீதா இசைவாயே."

"கஞ்சம் வாய்த்திட் டவர்க்குங் கூட்டிக்
கன்று மேய்த்திட் டவர்க்குங் கூற்றைக்
கன்ற மாய்த்திட் டவர்க்குந் தோற்றக் கிடையாநீ."

இவ்வாக்கின் அருமையைப் பாருங்கள்! என்ன அழகாகச் சொற்களும் பொருளும் அமைந்து விளங்குகின்றன? இதனாலன்றோ "திருப்புகழ் அமுதம்" என்றும், "திருப்புகழ்ச் சந்தப் ப்ரவாகம்" என்றும் பாராட்டப்பட்டுத் திருப்புகழ் யாவருக்கும் உகந்ததாய் விளங்குகின்றது? அருணகிரியாருடைய வாக்கின் பிரபாவத்துக்குச்

"சத்தநிலை வழுவாமல் அத்தமொரு சற்றுந்
தளர்ந்து வெளிறாமல் அமுதந்,
தழுவு பதினாறு யிரந் திருப் புகழெனும் தமிழ்மாலை
[சாற்றி யுருகிச்
சித்தி பெறும் அருணகிரி நாதர்"—என வரகவி மார்க்க சகாயதேவர் அருளிய திருவாக்கே போதிய சான்றாம்.

சமண நன் மக்கள்.

கோலா பாலூர் ஸ்ரீமான் மே. சக்கரவர்த்தி எழுதியது.

சமண ரென்று குறிக்கும் பொழுதெல்லாம் யாவர்க்கும் தமிழ் என்ற நினைவு வருமென்பது நிச்சயம். சமணர்கள் தமிழ் நாட்டில் குடியேறிய காலமுதல் அவர்கள் இவ்வினிய நாட்டைத் தமதாகக்கொண்டு தமிழ் கற்று, தமிழ் தழைக்கத் தமிழை வளம் படுத்துவா ராயினர். சமணர் எந் நாட்டில் குடியேறினர்களோ அவ்வவ் நாட்டிற் குரிய மொழியை ஓதி அவர்கள் அம்மொழி களுக்குத் தனியான எழில் கொடுத்து அழியா நலத்தை உண் டாக்கி வைத்தார்கள். தமிழ், கன்னடம், மகராஷ்டிரம், ஹிந்தி, பிராகிருதம், சமஸ்கிருதம் முதலிய பாஷைகளில் அவர்கள் இயற் றிய நூல்கள் அனந்தம். அவைகளில் மக்கள் அறிந்து ஆனந் திக்கக் கூடிய விஷயங்கள் பல செறிந்து கிடக்கின்றன. பாரத மக்களுக் குள்ள திருவும் பெருமையும் அவைகளிற்றான் பொதிந் துள்ளன வென்று செல்வது மிகை யாகாது.

சமணர்கள் தமிழிலே நிகண்டுகளும் நெடுங் கணக்கும் நெல் லிலக்கம் எண்சுவடி நீதிசாரம் முதலியனவும், வடமொழிக்கு அணியாய் இலங்குகின்ற காவியங்கள் போன்று தமிழிலும் தமிழ்ச் சுவை நனி சொட்டச் சொட்டப் பெருங்காவியங்கள், இலக்கண நூல்கள், வான சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள், நீதி சாஸ்திரங்கள் முதலியனவும் இயற்றி யளித்துள்ளார்கள். அரும் பெரும் பொருள்களைத் தன்னகத்தே கொண்டு தமிழருக்குப் பெருந் தனமாய் விளங்கும் இப்பனுவல்களைப் போல இனிய சொன்னயமும் பொருணயமும் அமைந்த நூல்கள் பிற்காலத்தவர் செய்த நூல்களில் இன்றளவுங் காணப்படவில்லை யென்று தமி ழாராய்வோர் உரையா நிற்கின்றனர்.

கலைமகளின் இரு கண்களாய் விளங்கும் வடமொழி தென் மொழிகளை நெடுங்காலம் பாடுபட்டுச் சீராக்கிப் பத்திய நடையை யும் கத்திய நடையையும், இவ்விரு மொழிகளின் சேர்க்கையா லுண்டாகும் மணிப்பவள நடையையும் இலக்கண வரம்புக்குட் படுத்தி எழில்பெறச் செய்து என்றும் பொன்றா நலனை மக்கட்கு அடையச் செய்தவர் இச் சமணர்களே யாவர். காலத்துக் கேற்க மக்களின் நடையுடை பாவனைகள் மாறிமாறிச் சீர்ப்பட்டு வரு வதுபோல மொழிகளும் அவ்வாறு சீரடைதல் உண்மையாயினும், சமணர்கள் காலபேதத்தால் மாறுபட்டுத் தாழ்ந்த நிலையடைந்து நெடுங்கால மாகியும், அவர்களது நன்னிலைக் காலத்தில் எழுந்த ஆழ்ந்த கருத்தும், தெள்ளிய புலனும், தண்ணிய ஒழுக்கமும்,

அமிழ்தினும் இனிய சுவையும் அமைந்துள்ள நூல்களைப்போல இந் நாளளவும் முளையாமையே அவர்களின் மொழிச் சதுரப்பாட்டிற் குப் போதிய சான்றாகின்றது.

சமணர்கள் சமய மேம்பாட்டிற்குக் கோலிய நல்வழியைப் பின்பற்றியே சைவ வைணவர்களும் பிறரும் தங்கள் சமயக் கோட்பாடுகளைச் சீராக்கி நலம் பெற்றனரென்று நடுநிலை பிற ழாது சமய நெறி யாராய்வோர் கூறுவர்.

இத்தகைய சமண நன் மக்களைப் பிற்காலத்துக் கிளைத் தோங்கிய சைவ வைணவர்கள் சமய வேறுபாட்டால் பகை கொண்டு குண்டர், மிண்டர், கறுப்பர் என வசை புராணம் பாடிக் கழுவிலேற்றியும் செக்கிலிட் டாட்டியும் துன்புறுத்தி யொழித் தனர். இதனோடும் அமையாது இவர்கள், சமணர்கள் தமி ழணங்கிற்கு அணியாய் இயற்றியருளிய அரும் பெரும் நூல்களை அனலிலும் புனலிலும் இட்டு அழித்தனர். பண்டைத் தமிழ்ப் பனுவல்களின் அழிவுக்குக் காரணமாய் நின்ற பலவற்றினுள்ளே இதுவும் ஒன்றாகும்.

சாமண்ணம், சிரமணம் என்று பிராகிருத சமஸ்கிருத மொழி களிலுள்ளனவே தமிழில் சமணம் என வந்தது. இதன் பொருள், சுகதுக்க சமத்துவ பாவிகத்வம் என்பது. இதனை யுடையோரே சமணர். இவர்கள் சமண சமயம் அல்லது ஜைன சமயத்தில் இல்லறங் கடந்த துறவிகள். சமண சமயத்தில் இல்லற த்திலுள்ளார்க்குச் 'சிராவகர்' என்று பெயர். இவர்கள் மனம் வாக்கு காயத்தாலும் பிராணி ஹிம்ஸையை நாடாதவர். அஹிம் ஸா பரமோ தர்ம மெனக் கொண்டவர். இத்தகையாரே சைவ வைணவ சமயாசாரியர்கட்குத் துன்பம் விளைத்ததாகக் கதை கள் புனைந்து கூறப்படுகின்றன. இவைகளையே சத்காலப் போக் காகக் கொண்டு புராணப் பிரசங்கங்கள் நடைபெறுகின்றன. சிறப்பாகத் தமிழ் நாட்டிற்கும், பொதுவாகப் பரத கண்டத்தி லுள்ள சமயங்கட்கும் மஹோபகாரியாய் விளங்கிய சமணர்களுக்கு நன்றி கூறுதல் இம் முறை யல்லா முறைதான் போலும்!

சமணரது உண்மை யொழுக்கத்தை உள்ளபடி உணர்ந்தோர் இத்தகைய வசைமொழிகளை உரைக்க மனம் ஒருப்படார்; அவர் கள் உள்ளதை ஒளியார்; இதனை மெய்ப்பிக்கப் புலவர் நன்மக்கள் சரித்திரங்க ளிருக்கின்றன. 'பரணிக்கோர் சயங்கொண்டான்' என விதந்தோதப் பெற்ற கவிச் சக்கரவர்த்தி சயங்கொண்டாரை, அபயன் 'நமதூர் யாது' என்று கேட்டபோது அவர் சோழவள நாட்டிலே நன்னிலத்திற்கு அண்மையிலுள்ள சமணர்வாழ் பதியாம் தீபங்குடியைத் தம தூர் என்று பெருமையாகக் குறிப்பிடும் பொழுது அவர் சொன்ன அழகான கவிகள் பின் வருமாறு:

ICE OF TH
28 JUL 1926
MADRAS

சமண நன் மக்கள்

“ நீருங் கயமு மிகுசோ லைகளும்
நிரை சேர் பழனக் கரையின் கமுகுங்
காரும் பாவு மவனா டிதெனக்
களிகூர் தமிழ்நா வலர்வாழ் புரியூர்
சீரும் புகழும் பணியும் பணியுந்
திகழ்சிற் றிடையு நடையு மிருகண்
கூரும் மகரக் குழையா ரதரங்
கோபங் கடியுந் தீபங் குடியே. (௧)

காலைப் பொழுது மாலைப் பொழுதுங்
கல்விப் பொருளே செல்வப் பொருளாய்
மேலைக் குருநற் குணனைக் கருதி
மிகுமா தவமே புரிவார் தமதூர்
சோலைக் குயில்வேள் வரவைப் பகரத்
துணையைக் கருதி மனமுற் றுருகுங்
கோலப் பணிசேர் மடவா ரதரங்
கோபங் கடியுந் தீபங் குடியே. (௨)

செய்யும் வினையு மிருளுண் பதுவுந்
தேனு நறவு மூனு முயிரும்
பொய்யுங் கொலையுங் களவுந் தவிரப்
பொய்தீர் அறநூல் செய்வார் தமதூர்
கையும் முகமும் விழியுங் குயமுங்
காலுங் கமலம் போலு மெனவே
கொய்யும் மடவார் கனிவா யதரங்
கோபங் கடியுந் தீபங் குடியே. (௩)

வஞ்சங் கருதார் பிறனில் விழையார்
வாமன் வழிநூல் வழுவார் நிதமும்
இஞ்சொன் மிகுமா தவர்தா டொழுதே
யியனல் லறமே புரிவார் தமதூர்
நஞ்சம் பயில்வான் கடன்மீ னளியா
னயனக் கடையார் மதனுக் கிடையார்
கொஞ்சஞ் சுகமென் மொழியா ரதரங்
கோபங் கடியுந் தீபங் குடியே. (௪)

அனகன் னமல னரியே றனையா
னாதிப் பெருமா னவர்மேல் வருவோன்
பனகப் பணிநீ ழலில்வா ழருகன்
பததா மரையே பணிவார் தமதூர்
கனகக் குழையார் தாளப் பணியார்
காதார் விழியார் போதார் முலையார்

குனிவிற் புருவப் படையா ரதரங்
கோபங் கடியுந் தீபங் குடியே. (ரு)

வண்டார் பிண்டிக் கிறைமுக் குடையான்
வாமன் றருமத் திகிரிப் படையான்
தொண்டா கியமா தவருக் குரியன்
றுகளார் மனமுற் றவருக் கரியன்
பண்டார் வேதப் பரமன் சரணைப்
பரிவா னிதமும் பணிவார் தமதூர்
குண்டார் முலைமென் மடவா ரதரங்
கோபங் கடியுந் தீபங் குடியே. (சு)

நிலைசேர் பொருளு நிலையில் பொருளும்
நிமல னெறியா லுலகுக் குரைசெய்
தலையா கியமா தவர்தா ணிதமுந்
தலைகொண் டிதமே புரிவார் தமதூர்
மலையோ குடமோ மணிமா முடியோ
வனசத் திளமா முகையோ முலையென்
கொலைவேல் விழியார் செவ்வா யதரங்
கோபங் கடியுந் தீபங் குடியே."

இவ்வாறு ஒழுக்க மேம்பாட்டால் உயர்ந்த சமண நன்மக்களை நன்றியுடன் புகழ்ந் துரைப்பார் தமிழ் நாட்டில் இன்றும் இல்லாம லிரார்.

தாமிரபர்ணியும் தாமிரமும்.

சிந்துபூந்துறை நா. இலக்குமணப் பெருமாள் எழுதியது.

'மலயந் தென்மலையே தென்னல் வருமலை சிமயம்' எனப் பல பெயர்கள் புனைந்த பொதிய மலையில் உற்பத்தியாகி, கங்கையினும் காவிரியினும் பெருமை மிகுந்து

'தடம்பணை தவழ்ந்து மடமயில் நடம்பயில்
வனம்பொழில் கடந்து குளம்பல நிரப்பி
இருகரை வாரமுந் திருமக ளுறையுளா'ச்

செய்து வருகின்ற புண்ணிய தாமிரபர்ணியின் பெருமையை யாவரே கணித்தவர்? இத் துணைப் பெருமை வாய்ந்த இந் நதி

யானது பாண்டிய நாட்டிலுள்ள பல நீர் நிலைகளையும் நிரப்பித் திருநெல்வேலி வழியாக மன்னார் மகராலயத்தில் கலக்கின்றது.

இந் நதியைப் பொருநை என்றும் பொருந்தம் என்றும் கூறுவர். தென் பாண்டி நாட்டிலுள்ள இந்தக் குடிநையைச் சிறப்பித்து பல தமிழ் நூல்கள் கூறுகின்றன. இந் நதியானது பல உப நதிகளால் கலக்கப்படுகிறது. அவற்றில் சிறந்தது :—

“ சத்தநர கினுந் தொலையார் புவிமீதிற்
பிறந்தபா தகங்கள் தீர்ப்பர்
இத்தரணி தனிற் பிறந்தற்
பாவமெலாம் கங்கை தனில் எய்தித்தீர்ப்பர்
உத்தர கங்கா நதியின் பாதகமும்
இது தீர்க்க உரிய தானல்
சித்திர கங்கா நதியை ஒத்ததொரு நதியுளதோ
செகங்கள் மூன்றில் ”?

திருக்குற்றாலத் தலபுராணம்.

என்று புகழப்பட்ட சித்திரா நதி. இத் துணைச் சிறப்பு வாய்ந்த சித்திர கங்கா நதியையே தனக்கு உபநதியாகக் கொண்ட தாமிர பர்ணியின் பெருமை அளவிறந்தது எனச் சொல்லவும் வேண்டுமோ ?

ரஸாயன சாஸ்திரிகள் தாமிரபர்ணி ஜலத்தில் தாமிர சத்து இருப்பதாகக் கண்டுபிடித் திருக்கிறார்கள். இக் காரணம் பற்றியே நமது முன்னோர்கள் இக் குடிநைக்குத் தாமிரபர்ணி எனப் பெய ரிட்டனர் போலும். தாமிரபர்ணியின் தீர்த்தமானது குட்டம் முத லிய தொத்து வியாதிகளை குணப்படுத்திவிடுகிறது. திருநெல்வேலி யைச் சார்ந்த சிந்துபூந்துறையின் அருகிலுள்ள ஒரு துறைக்கு குட் டத் துறை யென்று பெயர். ஆங்கு முன் ஒருக்கால் ஒரு குஷ்ட ரோகியாகிய அரசன் குளித்து அதன் பயனாகத் தன் நோயை குண மாக்கிக்கொண்டு சென்றார் என்று ஒரு கதை சொல்வதுண்டு. மேலும் தாமிரபர்ணி ஜலத்திற்கு நோய்களைத் தீர்க்கும் குணத்தைத் தவிரக் கன்ம வினைகளை நீக்கவும் சக்தி உண்டு. இது பற்றியே “ கங்கைக்கு மேலான புகழ்கொண்டு புவியுளோர் கன்ம வினை களை பொருநை ”—என்று கூறினர் பெரியோர். இதைப்பற்றி ஒரு சிறு கதையும் உண்டு :—

அதாவது:—பூதலத்தோர் யாவரும் தங்கள் பாவங்களை நீக்கற் பொருட்டு கங்கையில் போய் ஸ்நானம் செய்து தங்கள் பாவங் களைக் களைந்துவிட அப் பாவங்களின் சுமையைப் பொறுக்க மாட் டாதவளாய் கங்காதேவி எல்லாம் வல்ல இறைவனை வேண்ட அதற்கு இறைவன் ‘நீ போய்த் தாமிர பர்ணியில் ஸ்நானம்

செய்வையாயின் உனது பாவச் சுமை நீங்கும்' என்று திருவாய் மலர்ந்தருளினர். கங்காதேவியும் அவ்வாறே செய்ய அவள் பாவச் சுமையினின்றும் நீக்கப்பட்டாள்.

இப்படிச் சிறப்பு வாய்ந்த தாமிர பர்ணியைப் பற்றியும் அதன் தன்மையைப் பற்றியும் இதுகாறும் கூறினேம். இனி அத் தாமிர சத்துள்ள ஜலத்தினுல் ஏற்படும் நன்மைகளைப் பற்றிக் கூறுவோம்.

நம் முன்னேர்கள் ரஸாயன சாஸ்திரத்தில் தேர்ச்சி யடைந்திருந்தார்கள் என்பது வெளிப்படை. அவர்கள் நாம் பருகும் பானத்தைத் தாமிர பாத்திரத்திலே வைத்துப் பருகுதல் வேண்டுமென்றும், விரத காரியங்களுக்கெல்லாம் தாமிரத்தையே உபயோகித்தல் வேண்டுமென்றும் நமக்கு உபதேசித்துள்ளார். நம்மவர் ஆதிகாலந் தொட்டே செம்பின் அரிய குணத்தை அறிந்திருந்தார்கள் என்பதற்கு யாதொரு ஐயமு மில்லை. சீன தேசத்தவர்களிடமும் செப்புப் பாத்திரங்களை உபயோகிக்கும் வழக்கம் வெகு காலமாகக் குடிகொண் டிருக்கிறது.

இப்பொழுது நம் வீட்டிலுள்ள பித்தளைக் குடங்களை செப்புக் குடம் என்கிறேம், இது காராட்டை வெள்ளாடு என்பதை ஒக்கும். இதனுல் நாம் ஊகிப்ப தென்னவென்றால் நம்மவர் தண்ணீர் வைத்துக் கொள்வது செப்புக் குடமே என்பது நன்கு விளங்குகின்றது.

செப்புப் பாத்திரங்களில் தண்ணீரை வைத்தால் அத் தண்ணீரிலுள்ள சிறு விஷப் பூச்சிகள் எல்லாம் சிறிது நேரத்தில் மடிந்து போகின்றன. விஷபேதிக் காலங்களில் செப்புப் பாத்திரத்தில் வைத்த ஜலத்தை நாம் உட்கொள்வோ மானுல் நம்மை அந்த நோய் அணுகாது.

சீனதேசத்தில் இப்பொழுது விஷபேதிக் காலங்களில் ஒரு தாமிர பதக்கத்தைக் கயிற்றில் கட்டி, சீனர்கள் தங்கள் நாபிக்கு இரண்டு அங்குலத்துக்கு மேலாக வயிற்றில் படும்படியாக கழுத்திலிருந்து தொங்கவிட்டு விடுகின்றனர். இன்னும் சிலர் செம்புக் கம்பிகளை அரைக் கச்சையாக அணிந்து கொள்வதும் உண்டு. செம்புக் கனிகளில் வேலை செய்வோரை விஷபேதி தாக்குவதில்லையாம். ஆகையால் நாம் இனி நம் முன்னேரைப்போல் தாமிர பாத்திரங்களையே உபயோகிப்போம்:—அவ்வாறு செய்யின் நாம் தேகாரோக்யம் பெறுவோம் என்பதற் கைய மில்லை.

தாமிரபர்ணியின் தண்ணீரின் குணமும் தாமிர பாத்திரத்தில் வைக்கப்பட்ட தண்ணீரின் குணமும் ஒரு தன்மைத்து என்று சாஸ்திர விசாரிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.

சுபம்.

விக்கிரக ஆராதனை.

சிந்துபூந்துறை திரு. நா. இலக்குமணப் பெருமாள் எழுதியது.

விக்கிரக ஆராதனை, நம் முன்னோர்களால் நமது சித்த சுத்திக்காக வெகு காலங்களுக்கு முன்னரே ஏற்படுத்தப் பட்டது. விக்கிரக ஆராதனை செய்தால் மனதை ஒரு தன்மைப்படுத்தும் சக்தி வரும். அதாவது நம் மனதில் குடிகொண்டிருக்கும் மற்ற எண்ணங்க ளெல்லாம் மறைந்துபோய் அவ் விக்கிரக ஸ்வரூபமே மனதில் அமையும். உபநிடதத்தின் அர்த்தங்களை விக்கிரங்களில் இருடிகள் அமைத்திருக்கின்றனர். நம்மனோர் மேல் நோக்கிச் செல்வதற்கு மனதில் பிரம்மஞானம் விருத்தி யடைந்துகொண்டே யிருத்தல் வேண்டும். இக் கருத்துக் கொண்டே உபநிடத அர்த்தங்களை விக்கிரகங்களில் அமைத்திருக்கிறார்கள். ஆகவே அர்த்தத்தை கிரகித்துக்கொண்டு விக்கிரகத்தை ஆராதனை செய்தால் மனம் ஓர் நிலையில் நிற்பதுமன்றி உபநிடத அர்த்தங்களும் மனதில் நன்றாய் ஊன்றிக்கொண்டு வரும்.

'ஆலயந் தொழுவது சாலவும் நன்று'. நல்ல நிலையை அடைவதற்கு ஆலயம் செல்வது அவசியம். அங்ஙனமிருக்க அனேகர் கோவில் முதலியவைகளை அடியோடு அழித்துவிட வேண்டுமென்று பிதற்றுகிறார்கள். ஆலயத்திற்குச் செல்வதால் ஏதேனும் கெடுதி யுண்டாயின், அறிவுடையோர் அக் கெடுதியை விலக்க முயற்சி செய்வரே யன்றி அதை அழிக்க இணங்கமாட்டார்கள் என்பது திண்ணம். ஞானிகளைத் தவிற மற்றெல்லோரும் ஆலயம் செல்லுதல் அவசியம். ஏனென்றால் ஞானிகள் மேல் நிலையை அடைந்து விட்டதால் அவர்களுக்கு ஆலயம் தேவை யில்லை.

இவ்வுலகில் எக்காலத்திலும் காட்டு மிராண்டிகள் முதல் மிகவும் நாகரீகம் அடைந்தவர்கள் வரை எல்லோருக் குள்ளும் மதசம்பந்தமான பூசைக்காக விக்கிரகங்கள் உபயோகப் படுத்தப் பட்டு வருகின்றன.

அதிலும் நாகரீக முள்ளவர்களிடத்தில் தியானத்திற்கு உதவியாக விக்கிரகங்கள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆங்காங் குள்ளதாயும், அநித்தியமாயுமுள்ள சில காரணங்களால் விக்கிராதாரனை தள்ளப்பட்டது. அதுவும் பார்வையில் தள்ளப் பட்டதே ஒழிய உண்மையில் தள்ளப்படவில்லை. இவ்வாறு ஏறக் குறைய மூன்றரை நூற்றாண்டுகளுக்கு முன் கிருஸ்தவர்களில் சிறுபான்மையோர்—ப்ராடஸ்டென்ஸ் (Protestants) என்பவர்கள் விக்கிராதாரனையைத் தள்ளிவிட்டனர். அதுவும் அக்காலத்

63

28 JUL 1926

தேற்பட்ட பல விபரீத சம்பவங்களால் நடந்தவைகளே யன்றிப் பிறிதொன்று மன்று. யூதர்களும் (Jews) சில சம்பவங்களால் விக்கிராதாரனையைத் தள்ளிவிட்டனர். மகம்மதியர்களும் அவ்வாறே பல விபரீத சம்பவங்களால் விக்கிரகாராதனையைத் தள்ளிவிட்டனர். இதுபோலவே ஹிந்து மதத்தைச் சார்ந்த 'விக்' ஜாதியார்' 'ஆரிய சமாஜ்' 'பிரம்ம சமாஜ்' என்னு மதத்தில் சேர்ந்துள்ளோர் விக்கிர ஆராதனையை நீக்கி விட்டனர்.

வெகு நாட் செல்ல யூதர்கள் 'ஆர்க்' என்னும் விக்கிரகத்தையும், மகம்மதியர் 'காம்' எனும் விக்கிரகத்தையும், விக் ஜாதியார் 'கிரந்த' எனும் விக்கிரகத்தையும் வணங்க ஆரம்பித்தனர்.

பூதலத்தோர் யாவரும் ஒப்பக்கூடியதாயும் பிடிவாதமாயுமுள்ள எதாவதொரு வழக்கத்தை நோக்கி அதற்குச் சரியான காரணம் இருத்தல்வேண்டுமென அனுமானித்து, அக் காரணத்தை அறிந்து, அவசியமானுல் அக்காரணத்தால் உண்டான வழக்கத்தைச் சீர்திருத்தம் செய்யவேண்டுமே யன்றி, அதை அடியோடு நீக்கிவிடுதல் தகுதியன்று.

மனிதனுடைய வரையறையுள்ள மனதானது சர்வ வியாபியான பரப்பிரம்மத்தை அறியவும், கைப்பற்றவும் முடியாது. அப் பரப்பிரம்மமானது 'இதுவல்ல' என்று எதிர்மறையால் தான் விஸ்தரிக்க முடியுமே யன்றி வேறெவ்விதத்திலும் முடியாது. குணம், லட்சணம் இவைக ளில்லாத நிர்குணப் பிரம்மமானது, நினைக்கப்படவாவது, நேசிக்கப்படவாவது, பூஜிக்கப்படவாவது முடியாது. குணம், லட்சணம் இவைகளோடு கூடிய ஸகுணப் பிரம்மம் தான் நினைக்கப்படவும், நேசிக்கப்படவும், பூஜிக்கப்படவும் முடியும். அவருடைய குணங்களால் நாம் அவரை யடையலாம், தொடலாம், உணரலாம், நம்முடைய இருதயங்கள் அவரது பாதங்களில் பணியலாம். பிரம்மத்தின் குணத்தையாவது அல்லது சில குணங்களையாவது அடையாளமாகக் காட்டும் பிம்பமே விக்கிரகம் எனப்படும். விக்கிரகத்தில் அவருடைய குணுதிசயங்களைப் பார்க்கக்கூடும். உதாரணமாக விஷ்ணுவின் விக்கிரகமானது மேலே கவிந்திருக்கும் மேகத்தின் நிறத்தைப்போல் நீல வர்ணமுடையதாய் இருக்கிறது—சிருஷ்டிக்கும் சப்தத்திற்காக ஒரு கையில் சங்கும், அதிகாரத்வத்திற்காக மற்றொரு கையில் கதையும், சக்திக்காக மூன்ருவது கையில் சக்கரமும், ஊக்கம் முதலியவைகளுக்காக நான்காவது கையில் கமலமும், நான்கு திக்குகளுக்கும் நான்கு கைகளை உடைத்தாயிருக்கிறது. இவ்வகைப்பட்ட பெரிய அடையாளங்களின் உருவங்கள் மேலுலகில் காணப்படுகின்றன. அதைக் கண்ணுற்ற முனிவர்கள் பூமியிலுள்ளவர்களுக்கு

அவருடைய சக்திகளும் குணங்களும் ஞாபகம் இருக்கு மாறு அவைகளின் உருவங்களை அவ்வாறே பூமியில் விக்கிரக ரூபமாய் ஆக்கினார்கள்.

கடவுள் ஒருவரே, அவர் எங்கும் இருக்கிறார், எதிலு மிருக்கிறார். ஒரு மரம் அல்லது கல் கடவுளின் இயல்பான பிரதி நிதியாக உபயோகிக்கப் படலாம். உள்ளே யிருக்கிற ஒரு ஜீவ னுக்குப் பதிலாக ஓர் உருவத்தை வணங்குவது தப்பிதமான நினைப்போடு கூடிய விக்கிர ஆராதனை. எல்லாவற்றிலு மிருக் கிற கடவுளை வணங்குவதும், எல்லாப் பொருள்களிலு மிருக்கிற அவரை நேசிப்பதும் சரியான நினைப்போடு கூடிய விக்கிரக ஆராதனை.

நாம் கடவுளை வணங்கும் போதாகிலும், அல்லது தியானஞ் செய்யும் போதாகிலும் அவரைப்பற்றி மனதில் ஓர் நினைவு உண் டாக்கிக் கொள்ளுகிறோம். நாம் அவரை சிருஷ்டி கர்த்தாவாகவும், ஆளுகிறவராகவும், தகப்பனு ராகவும், காப்பாற்றுகிறவராகவும், நியாயமுள்ளவராகவும், சக்தி யுள்ளவராகவும், நேசமுள்ளவராகவு மிருக்கிறதாக நினைக்கிறோம். ஆனால், மனதினால் அவருடைய பிம்பம் ஒன்றை, அதாவது ஒரு விக்கிரகத்தை உண்டாக்கிக் கொள்ளுதலாம். ஏதாவது சில நினைவுகளில்லாமல் நாம் அவரை வணங்கவாவது அவரைப்பற்றி நினைக்கவாவது முடியாது.

தியானம் செய்யுங்கால் விக்கிரகமானது அதனிடத்திலேயே மனதைச் செலுத்துவதற்கு ஓர் தாரகமாக விருக்கிறது. விக்கிர கத்தை அசைவற்று, இரண்டொரு நிமிஷம் பார்த்தபின், கண் களை மூடவேண்டும். அவ்வடிவம் மனதில் தோன்றி அதனிடத்தி லேயே கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அவ்வித நிலை யில் இருக்கும் பொழுது அவ்வடிவம் மறைந்துபோய், உள்ளிருக் கிற ஜீவன் அறிவு பூராவாயும் மூடி, அதை உயிரோடும் சந்தோ ஷத்தோடு மிருக்கும்படி செய்யவேண்டும்.—நம் மனத்திலும் நாம் நன்மை யடைய வேண்டும் என்ற அந்தரங்க ஆவல் இருக்க வேண்டும்.

அந்த ஆவல் எத்தன்மையதா யிருத்தல் வேண்டு மென்பதைப் பற்றி விவேகானந்த ஸ்வாமிகள் ஒரு கதை கூறுவதுண்டு.—ஒரு சிஷ்யன் ஓர்கால் குருவினிடம் சென்று "எனக்கு பிரம்ம நிலை பெறவேண்டுமென்ற ஆவலிருக்கிறது. ஆகையால் எனக்கு அது சித்திக்கும்படி ஞானோபதேசம் செய்தருள வேண்டும்" என்று வணங்கி வேண்டினான். மிக உஷ்ணமா யிருக்கும் ஓர் நாள் குரு தன் சிஷ்யனை நோக்கி "நதியிற்சென்று நீராடி வருவோம்" என

சிஷ்யன் நல்ல தென்று குருவினுடன் சென்ருன். இருவரும் ஸ்நானத்திற்காகத் தண்ணீரில் இறங்கினுர்கள். உடனே குரு சிஷ்யனுடைய காலைப்பற்றி நன்ருய் இழுத்துக்கொண்டு அவனைத் தண்ணீரடியிலேயே கொஞ்சநேரம் வைத்திருந்தார். சிஷ்யன் சிறிது நேரம் கஷ்டப்பட்ட பிறகு அவனை விட்டு விட்டார். இருவரும் கரையேறிய பின்னர் குரு சிஷ்யனைப் பார்த்து "அப்பா! நீ தண்ணீ ரடியி லிருக்கும்போது உனக்கு எது அவசியமாய் வேண்டி யிருந்தது?" என்று வினவ சிஷ்யன் "கொஞ்சம் வாயுவு தான் அவசியம்" என்ருன். உடனே குரு "எவ்வளவு ஆவலோடு நீ வாயுவை விரும்பினுயோ, நீ அவ்வளவு ஆவலோடு பிரம்ம நிலையை விரும்பினு யானுல் உனக்கு அது உடனே சித்திக்கும்" என்ருர். அதுபோல் ஆவல் அதிகமாய் இருந்தால் உடனே நல்ல நிலை யடையலாம். கொஞ்சம் ஆவலிருந்தாலும் ஆலயந் தொழுதல் அதனை விருத்திசெய்து முடிவில் பிரம்ம நிலையை அடையச்செய்யும்.

விக்கிரகமானது காந்தத்தின் ஓர் மத்தியாக ஆகிறது. விக்கிரகத்தின் முன் வணக்கமும், தியானமும் அதிக எளிதாகச் செய்யக் கூடும். சுத்தமாயும் அமர்வாயுமுள்ள காந்தமானது அதைச்சுற்றிப் பரவுகிறது. அப்படிப் பரவுகிறதினுல் கொஞ்ச பிரயத்தனத்தோடு மனது சப்தமின்றி அசைவற்றிருக்கும்படி உதவியுள்ள ஆகாயத்தை யுண்டு பண்ணுகிறது. இன்னும் அவ்வாறு செய்யப்பட்ட மத்தியானது எத் தெய்வத்தின் காந்தியானது முன்னேயே அவ்விடத்திலிருக்கிறதோ அத்தெய்வத்தாலும் அவருடையநோக்கத்தை யிழுத்துக்கொண்டிருக்கிற பக்தனுடைய ஜெபம் அல்லது தியானத்தாலும், எளிதில் பலமுள்ளதாயும் திரும்பவும் உயிருள்ளதாயும் செய்யப் படலாம். அவர் இவ்வாறு முன்னுலே செய்யப்பட்ட மத்தியின் மூலமாக பக்தனுடைய ஜெபம் அல்லது தியானத்திற்குப் பதிலனுப்புகிருர்—மேனுட்டார் கொள்கைப் பிரகாரம் காந்த சக்தியைப் படித்தவர்களில் எவனும் விக்கிரகத்தின் பயனை எளிதில் அறிவான். பக்தியின் மார்க்கமானது அனேகம்—கீழ் நாட்டு முனிவர்கள் விக்கிரகாராதனை செய்யலாமென உத்தரவு கொடுத்ததில் அவர்களுடைய சாஸ்திர ரீதியான புத்தி சாதுரியமானது மெச்சத்தகுந்தது.

சுபம்.

விக்கிரக வணக்கத்தின் விசிட்டம்.

வண்ணைநகர். ஸ்ரீ க. வைத்தியலிங்கம் பிள்ளை எழுதியது.

தூய்மையோ டொளிருந் துலாக்கோ லென்ன
நடுநிலை தணவா நண்பரே கேண்மின்
விக்கிர கத்தை விதித்து வழிபடும்
அடியா ரைச்சில அந்நிய சமயிகள்
ஒப்புயர் வில்லா வொருவனுக் கிணையாக்
கன்ன னியற்றிய செம்பையுங் கல்லையுங்
கடவுளென் றெண்ணிக் காலையும் மாலையும்
வழிபடு கின்றது மடமையா மென்றும்
ஈசனை நீவி ரிப்படி வழிபடின்
மெய்யாக வேயுமை வெகுளுவ ரென்றும்
அச்சிலை கட்கு அழகிய கண்கள்
இருக்கினும் பார்க்க வியலா தென்றுங்
காதுக ளிரண்டு காணப் படினுங்
கிளத்திய மொழிகளைக் கேட்கா வென்றும்
இவைபோ லநேக விழிந்த வினாக்களைக்
கேட்டுநம் மவரைக் கேலிசெய் திடுவர் !
அந்தோ! இவர்க ளறியாமை யென்னே !
கல்வி சிறூர்க்குக் கற்பிக்கும் போது
"அ" எனும் அக்ஷர மதனை யெழுதிக்
காட்டிக் கொடாமற் கற்பிக்க வாமோ ?
பூமிசாத் திரத்தைப் பிள்ளைக டமக்குப்
படமில் லாமல் படிப்பிக்க லாமோ ?
தந்தையை யறியாத் தனயர்க டமக்கு
அவரைவைத் தெடுத்த புகைப்பட மதனை
காட்டினுற் கண்டு களிப்படை யாரோ ?
அன்புட னெம்மை யாளுகை செய்யுஞ்
ஜோர்ஜ்மன் னரைப்போல் சொரூபமொன் றியற்றி
உயர்ந்த தவிசில் வைத்துப சரித்தாற்
சிந்தை வருந்தி முனிவுசெய் திடுவரோ ?
அப்பணிக் காக அகமிக மகிழ்ந்து
அலக்க ணுறுதெமை யாதரித் திடுவரே
அழகிய முத்தி னருங்குண மதனை
வராக மறிந்து மதித்திட வல்லதோ ?
கூறிடு விவிலிய புத்தகங் குருசு
புறவின் வடிவையும் புந்தியி லுணர்ந்து
வந்திப் பதுவிக் கிரக வணக்கமா
மென்பதை யிவர்க ளெண்ணுத தென்னே ?

லக்ஷ்மி

அன்னார் வேத புத்தகத் தமைந்த
ஒவ்வொரு வசனமு மொவ்வோ ரட்சரமும்
சொரூப வணக்கமாய்ச் சொல்லலா மன்றோ ?
எம்மவர் தெய்வமா யெண்ணி வழிபடும்
அச்சொரூ பத்துக் கழகிய காதுகண்
இருந்துங் கேளா தென்றிடி னிவர்கள்
கடவுளின் முன்னே கண்களை மூடிச்
செபிக்கும் போதச் செபங்க ளனைத்தையும்
எற்றுவிட் டேனென் றெப்போ தாவது
தூயோ னிவர்க்குச் சொன்னது முண்டோ ?
சிந்தை வருந்திச் செய்த செபங்களை
ஏற்று மறுமொழி யியம்பாக் கடவுளை
பின்னருஞ் செபித்தல் பேதமை யன்றோ !
கண்கா துள்ள கடவுளா யிருந்தால்
இவர்கள் வேண்டுகோ ளனைத்தையு மேற்று
மறுமொழி கூறு திருப்பது மரபோ ?
இவைகளை யுணரா தெதிரியை வினவிய
இவருக் குலகி லெதனையொப் பிடலாம் !
" மாமி யுடைத்தா லதுமண் சட்டி
மருமக ளுடைத்தா லதுபொன் சட்டியா ?"
சகத்திற் பொருந்திய சராசர மனைத்தும்
இடையீ டின்றி யிருந்திடு மிறைவன்
கல்லினுஞ் செம்பினு மில்லையென் றிவர்கள்
விதண்டா வாதம் புரிந்துவீ ணாகத்
தேவத் துரோகிக ளாவது சிறப்போ ?
செம்புகல் லாலே செய்தரு பத்தைப்
பரமனைப் போலப் பாவனை பண்ணி
வழிபடு கின்றா ரன்றிநம் மவர்கள்
கல்லே செம்பே கதிதா வென்று
எவர்க ளாகினு மேத்துகின் றார்களோ ?
உண்மையை யுணரா தொருவரை யிகழ்வது
உய்தியில் பாவ மெனவுரைத் தனரே !
ஆதலா லெமது அன்பரே கேண்மின் !
கருதுசெஞ் சோற்றுக் கடன்கழிப் பதற்குப்
புறச்சம யத்தவர் புகலும் மொழிகளை
மெய்யென் றெண்ணி நரகில்வீ ழாது
தற்பா னுறைகுரு லிங்க சங்கமம்
எனுமூ விடத்து மிறைவனை வணங்கி
இம்மையில் நல்வாழ் வெய்தி
மறுமையிற் கயிலை மன்னிடு வீரே.

விஜயா

அல்லது

312

ஸ்ரீமான் சி. வா. ஜெகந்நாதன் எழுதியது.

(440-ம் பக்கத் தொடர்ச்சி.)

நல்ல வேளையாக ஒருவரும் அதைக் கேட்கவில்லை. விநாயகர் என்பதின் முதலெழுத்து வி. ஜம்புகேச்வரர் முதலெழுத்து ஜ. யாமளா என்பதின் முதலெழுத்து யா. மூன்றையும் சேர்த்தால் விஜயா என்றாகிறது. ஆக, இப்பொழுது இந்த முதல் மூன்று படங்களையும் சந்தேகமின்றித் தெரிந்து கொள்வதற்காகவே, விஜயா, 312 என்ற ரகஸ்யக் குறிப்புகள் இருக்கவேண்டும் என்று சந்தேகமறத் தெரிந்து கொண்டான். இனி என்ன செய்வது? முதல் மூன்று படங்களிலேயே தனது முழு ஆராய்ச்சியையும் இனிச் செய்யவேண்டும் என்று எண்ணிக் கொண்டான். தனது வழிபடு தெய்வத்தையும் துதித்துக் கொண்டான். மறு நாள் சாவகாசமாய்ப் பார்த்துக் கொள்ளலாம் என்று அன்றிரவு படுத்துக்கொண்டான். தூக்கம் வருகிறதா? அவனது மனைவி முதலியவர்களெல்லாம் எது இவனுக்குப் பயித்தியம் பிடித்து விடும்போலிருக்கிறதே என்று பயப்பட்டார்கள். அவர்களுக்குத் தெரியுமா இவனது பேராவல்? இரவு முழுதும் தூக்கமே இல்லாமல் விநாயகர், ஜம்புலிங்கேஸ்வரர், யாமளா இந்த மூன்று படங்களைப் பற்றியே சிந்தனை செய்துகொண்டிருந்தான். அன்று இரவு வெகு நாழிகை இருப்பதுபோல் தோன்றிற்று. எப்பொழுது விடியும் என்று ஆவலுடன் விடியற் காலையை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். கடைசியில் கோழிகள் கூவின. அருணன் இந்திரன் திசை யணுகினன். சத்ய நாராயணன் தனது காலைக் கடன்களை முடித்துக் கொண்டு தனது வியாபார ஸ்தலத்தைப் போய்ப் பார்த்துவிட்டுக் காலை பத்து மணிக்கே உணவருந்திய பின் தனது படுக்கை யறைக்குட் சென்று கதவை மூடிவிட்டு ஜன்னல்களைத் திறந்து வைத்துக்கொண்டு தனது ஆராய்ச்சியைத் தொடங்கினான். முதல் மூன்று படங்களையும் நன்றாகக் கையால் தடவிப் பார்த்தான். வெகு நாட்களுக்கு முன்னர் எழுதியவை யானதால் எல்லாம் மங்கி ஒளி யிழந்து விளங்கின. அந்தப் படங்கள் இருக்கும் பாகத்தில் சுவற்றில் ஏதாவது இருக்கலாம் என்று நினைக்கவே, அதனைச் சோதனை

செய்யவேண்டும் என்ற அவா அவனால் அடக்க முடியவில்லை. எனவே தனது காரியத்திற் கனுகூலமாகக் ஒரு சிறு கடப் பாறை எடுத்து வந்து, அந்தப் படங்களுள்ள பாகத்தை இடிக்க ஆரம்பித்தான். குறிப்பு வார்த்தையில் எண்ணிக்கை எந்த முறையில் உளதோ அம் முறையிலேயே தனது சோதனையைச் செய்யக் கருதி முதலில் விநாயகர் படமுள்ள இடத்தை இடித் தான். அவனுக்கிருந்த ஆத்திரம் இவ்வள வவ்வளவென்று சொல்ல முடியாது. வெகு வேகமாக அதிக சத்தம் உண்டாகாதபடி தனது வேலையைச் செய்தான். அந்தத் தருணத்தில் சுவற்றின்மேலே பூசியிருந்த காரைப்பாளம் பெயர்ந்துவிட்டது. அதன் பின்னர் ஒரு பலகையும் அதன் உள்ளே ஒரு சிறு அறையும் இருந்தன.

அதிகமாகக் கதையை வளர்த்துக் கொண்டு போவானேன்? சத்ய நாராயணன் ஆராய்ச்சியில், விநாயகர் படம் இருந்த இடத்தில் ஒரு திறவுகோலும், ஜம்புலிங்கேஸ்வரர் இருந்த இடத் தில் ஒரு தாமிரப் பட்டயமும், யாமளா தேவி இருந்த இடத்தில் மற்றொன்றும் இருந்தன. அப் பட்டயங்களில் ஒரு புதையலின் விவரத்தையும், அப் புதையல் ஒரு பெருந் தண்டவாளப் பெட்டி யில் இருப்பதாகவும், அதன் சாவி முதற் குறித்த இடத்தில் இருப்ப தாகவும் எழுதி யிருந்ததுமன்றித் தன் சந்ததியார்கள் யாரேனும் அப் புதையலைக் காணும் பேறுற்றனர் எனின் ஓராயிரம் பவுன் தர்மத்திற்குச் செலவழித்து விடவேண்டுமென்றும், வேறு எவ ரேனும் உறுவரேல், தர்மச் செலவு ஈராயிரம் போகத் தனது சந்ததியாருக்கு மிகுந்ததில் பாதி யளிக்கவேண்டு மென்றும், இல்லையெனின் பலவித பாவங்களுக்காளாவர் என்றும் நாகேந் திரர் எழுதி இருந்தார். சத்ய நாராயணனது சந்தோஷத்தை விவரிக்க முடியுமா?

இரண்டு மாதத்தில், வேண்டிய முயற்சிகளுடனும் ஏற்பாடு களுடனும் புதையலை எடுத்துத் தனக் குரிமை யாக்கிக் கொண் டான் சத்ய நாராயணன். புதையற் றொகை கொஞ்ச மல்ல. ஓர் இலக்கம் பவுன்க ளாகும். இப்பொழுது தான் விஜயா, 312 என்ற இரு வார்த்தைகளும் இலக்ஷம் பவுன் பெறும் என்று அறிந்து தன் தந்தை இறக்கும்பொழுது தனக்குப் பகீரதப் பட்டம் அளித்து ஆசி கூறினதை நினைந்து ஆனந்தம் எய்தினன். நாகேந்திரர் வேண்டுகோளின் படியே ஓராயிரத்திற்கு ஈராயிரம் பவுன்களை தருமத்தில் செலவு செய்தான். அன்றியும் ஒரு பெரு மாளிகை அமைத்துப் புதையல் கிடைப்பதற் குதவியா யிருந்த 'விஜயா' என்ற மொழியின் ஞாபகார்த்தமாக 'விஜய விலாஸம்' எனப் பெயரிட்டதோ டமையாது, மறு வருடம் பிறந்த பெண் குழந் தைக்கு 'விஜயா' என்றே பெயர் வைத்தான்.

சுபம்!

பானுபாய்

(ஸ்ரீமான் சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது.)

(505-ம் பக்கத் தொடர்ச்சி)

XIX

மறு நாள், படானி நவாபின் தலை நகரான ராஜ மஹாலுக்குப் பானுபாயைப் பின் தொடர்ந்து செல்வதற்கு மாணவரெல்லோருஞ் சித்தமா யிருந்தார்கள். அதிகாலையில் நவாபின் ஆப்த நண்பரொருவர், பானுபாய் அணிந்துகொள்வதற்கு விலையுயர்ந்த பட்டாடைகளையும், இரத்தினாபரணங்களையுங் கொண்டுவந்தனர். அவள், தன்னை அலங்கரித்துக்கொண்டாள். அவள் அழகின் காந்தி அவளிருந்த இடமெங்கும் வீசியது. மாணவரும், காலுவின் கூட்டத்தினரும், சந்திரனைச் சூழ்ந்த நட்சத்திரக் கூட்டங்களைப்போலப் பானுபாயைச் சூழ்ந்து, அவளை நவாபின் தலை நகரில் சேர்த்தனர். உடனே அவளை நவாபின் பரிவாரங்கள், மிக்க மரியாதையுடனும் ஆடம்பரத்துடனும் வரவேற்று, நவாபின் அந்தப் புரத்திற்கு அழைத்துப் போயினர். அவள், அந்தப் புரம் பிரவேசித்த அன்றே டெல்லி நகரில் ஒரு பெருஞ் சம்பவம் நிகழ்ந்தது. அச் சம்பவம் இச் சரித்திர நிகழ்ச்சியை முற்றும் மாற்றிவிட்டது. அக்பர் ஷா இப்போது இந்தியா சக்கரவர்த்தி யாயினர். அவர், அதிசயிக்கத்தக்க வல்லமையும், தமது குடிகளுக்கு அநுகூலஞ்செய்யும் நோக்கமும், மத வேற்றுமை ஜாதி வேற்றுமை பாராட்டாது எல்லாரிடத்தும் சமவுணர்ச்சி யுடையவருமாவர். அன்றியும், அவர், கால தேச வர்த்தமானங்களையும், உலகப் போக்கையும் நன்குணர்ந்த இளைஞராவர். அவர் சிங்காதனமேறினதும், தேச ஜனங்களின் மனப்பாங்கையும், தேசத்தின் உண்மையான நிலைமையையும் ஆராய்ந்தறிந்து வரத் தேசமெங்கும் பிறரறியாதபடி அநேக ஒற்றர்களை யனுப்பினார். இராஜா தோடார் மாலின் குமரர் சுதர்ன்ய மாலை வங்காளத்திற்கு அனுப்பினார். அவர் ஓர் படகிலேறி வர்த்தகரைப் போல மாறு வேடம் பூண்டு அங்கு வந்து சேர்ந்தனர். அங்கே ஜனங்களுடைய நிலைமையைப்பற்றி விசாரணை செய்யத் தலைப்பட்டனர். அப்போது அவர், அநந்தராயைக் கண்டு பேசியபோது, அநந்தன் ஊரின் வளப்பத்தையும் ஜனங்களின் நிலைமையையும் விவரமாகக் கூறினான். அதனால், அநந்தராய், தம்முடைய வேலையில் தமக்குப் பேருதவியா யிருப்பானெனக் கருதினார். அவர்க ளிருவரும் சமவயதுடையவர்க ளானதால் அதிவிரைவில் ஒருவரை யொருவர் விட்டு நீங்காச் சிநேகித ரானார்கள். சுதான்ய மால், இரக்கமற்ற

28 JUL 1926

நெஞ்சினராகிய படானியர், ஜனங்களுக்குச் செய்துவரும் எண்ணற்ற கொடுமைகளை யெல்லாம் அநந்தராய் மூலமாகத் தெரிந்து கொண்டார். அவர் அக்பருடைய விசேடங்களையும், அவர் எப்போதும் ஜனானுகூல வாதியாயும், இராஜ்ஜிய தந்திர நிபுணராயுமிருப்பதையும் அநந்தராய்க்கு விவரித்துக் கூறினர். அவர், இந்துவென்றும் மகமதிய ரென்றும் பேதம் பாராட்டாதவ ராதலால், அவரது அரசாட்சியில் என்றைக்கேனும் வங்காள கவர்னராக வரக் கூடுமென்றும் அநந்தனுக்குத் தெரிவித்தனர். அதனைக் கேட்டதும், அநந்தன், தான் கவர்னராக வரலாமென்ற பேராவலோடு, சுதான்யமாலின் விசாரணை வேலையில் தன்னாலானமட்டும் சோரா முயற்சியுடன் அவருக்கு உதவிபுரிந்து வந்தான். சுதான்யமால், ஜனங்களுடைய முறைப்பாட்டுகளைத் தமக்குப் போதுமான மட்டுந் தெரிந்துகொண்டு, டெல்லி நகருக்குத் திரும்பிவிட்டனர். அநந்தனும், அங்கே தனக்கு ஒருகால் ஏதேனும் கௌரவமான உத்தியோகங் கிடைக்கலாம், அதனால், தன் தாய் நாட்டின் துன்பங்களை ஒருவாறு தொலைக்கலாமென்ற நோக்கத்தோடு அவரோடு சென்றான்.

அநந்தன், தனது நண்பர் சுதான்யரோடு, டெல்லியில், இராஜா தோடார் மாலினுடைய பெரிய மாளிகையில் வசித்து வந்தான். தூரதிருஷ்டியுடையவரான இராச்சிய தந்திரி, அநந்தனுடைய துணை வலிகொண்டு, ஒருகால், வங்காளத்தில் மொகலாயர் ஆட்சியைத் தாபிக்கக் கூடுமென்பதை எளிதில் அறிந்து கொண்டார். ஆனால், வேலையின் நெருக்கடியால் அநந்தனைச் சக்கரவர்த்தியின் சமுகத்தில் கொண்டுபோவதற்கு அவருக்குச் சமயம் வாய்க்கவில்லை. ஆயினும், அநந்தனை, சக்கரவர்த்தியாரும் டெல்லி நகர மாந்தரும் நேரே தெரிந்துகொள்ள சமயம் நேரிட்டது. அஃதெப்படி?

அக்பர் சக்கரவர்த்தி, ஒரு நாட் காலையில் கடவுளைத் தொழுதற்கு ஜிம்மா மசூதிக்குச் சென்றிருந்தார். அவரது உலகப் பிரசித்தமான யானைப்பாகன் அதன் பிடரியின் மீது உட்கார்ந்திருந்தனன். சடுதியில் அந்த யானை மதங் கொண்டு, பாகனைக் கீழே தள்ளிக் கொன்றுவிட்டது. பிறகு அங்கு மிங்கும் ஓடத் தலைப்பட்டது. அதனைக் கண்ட ஜனங்கள் ஆரவாரஞ் செய்து, பயத்தால் சிதறியோடினார்கள். சக்கரவர்த்தியார் பெரிதும் மனங்கலங்கி "இந்த யானையைக் கொல்லக்கூடியவர் ஒருவரு மில்லையா?" வென்று கேட்டனர். "இல்லையானால் நானே சென்று அதனைக் கொல்லுகின்றேன். அந்த யானை என்னுடைய ஜனங்களைக் கொல்வதை யென் கண்ணால் பார்க்கச் சகிக்கவில்லையே" என்று வருந்தினர். உடனே ஒரு வாலிபன் "ராஜராஜேஸ்வரா! தாங்கள் எனக்கு அநுமதி

கொடுப்பீர்களாயின், அதனை நான் கொல்லக்கூடும்" என்று கூச்சலிட்டான். ஜனங்க ளெல்லோரும் அவன் யாரென்று அவன் முகத்தைப் பார்த்தார்கள். சக்கரவர்த்தியார், உடனே ஒரு துப்பாக்கியை அவனிடம் நீட்டினர். அதனை அவ்வாலிபன் பெற்றுக்கொண்டு, ஆயுதபாணியாய், வீர தீரத்துடன் வீதியின் நடுவே போய் நின்றான். அந்த யானை, வீதியில் நிற்கும் அவனைப் பார்த்து, அவனுக்கு நேராக ஓடி வந்தது. ஒருவரும் அதனைத் தடுக்கவில்லை. அவ்வாலிபனுக்கு, எதிர் பாராத மரணம் நேரிடுவது உண்மையென நினைத்து ஜனங்கள் "நிற்காதே, ஓடிப்போ" என்று ஏக காலத்தில் பெருங் கூச்சலிட்டனர். உடனே, மதவெறிகொண்ட யானையானது அவ்வாலிப னெதிரே வந்ததும், அவன் அதனைப் பார்த்துத் துப்பாக்கியாற் சுட்டான். அது கரிய மலை யொன்று வீழ்ந்தாற்போலத் திடீரெனத் தரையில் வீழ்ந்திறந்தது. ஜனக்கூட்டங் கலைந்து, சந்தோஷத்தால் அங்கு மிங்கும் சிதறி யோடிப்போயினர். சக்கரவர்த்தியார் மருதியினின்றும் வெளி வந்து "வாலிபனே! உனக்கு என்ன பரிசுவேண்டும்?" என்று மனமுவந்து கேட்டனர்.

"இராஜாதி ராஜனே! வங்காளா சுபேதார்—" என்று மிக்க வணக்கத்துடன் முழங்கால் படியிட்டுக் கேட்டான்.

அதனைக் கேட்டதும், சக்கரவர்த்தியார் பெரிதும் வியப்படைந்து, அங்கிருந்த பிரபுக்களைப் பார்த்து "இவ் வாலிபனை எவரேனும் அறிவீர்களா?" என்றார்.

உடனே தோடர்மால் "ராஜராஜேஸ்வரா! ஆம், எனக்குத் தெரியும். வங்காளத்திலிருந்து என்னுடைய குமாரனோடு வந்திருக்கின்றார். இவர் என்னுடைய வீட்டில்தான் இருக்கின்றார்" என்று சொன்னார்.

சக்கரவர்த்தியார் "சரி, இவ் வாலிபனை இன்றைக்குத் திவானியின் கச்சேரிக்கு அழைத்துப்போம்" என்று சொல்லி, அவ் வாலிபனைப் பார்த்து, "வாலிபனே! உன்னுடைய வேண்டுகைக்கு நான் இணங்கினேன். நீ இன்று முதல் ஆயிரம் யுத்த வீரருக்குச் சேனாதிபதியாயிருக்கக் கடவாய். இந்த வாளாயுதத்தைப் பிடித்துக்கொள். அதனைத் தக்கபடி உபயோகிப்பாய். இராஜ்ஜிய பாரத்தைத் தாங்கும் பல தம்பங்களில் நீயு மொரு தம்ப மாவாயென்பதை உன் மனத்திற் பதியவை. என் வல்லமை யாவும் என்னுடைய சேனாபதிகளின் புய வலிமையைப் பொறுத்திருக்கின்றது" என்று பலவாறு புத்தி கூறினார்.

வாலிபன் நன்றி யுணர்ந்தவனாய், இன்பக் கண்ணீர் பெருக்கினான். அவன், சிறிது வருத்தமுற்று "இவ் வாட்படையை, நான்,

வழுவற்ற நெறியிலே உபயோகிக்கக் கடவுள் எனக்கு நல்லறிவை யும் பலத்தையுங் கொடுக்கட்டும்'' என்று கடவுளைத் துதித்துக் கும்பிட்டான்.

சக்கரவர்த்தியார் "இராஜா தோடார்மால்! இன்றையதினம், உம்முடைய குமாரன் சுதான்ய மாவிடம், இவ் வாலிபனை என் சமுகத்தில் கொண்டுவரச் சொல்லுங்கள், இன்னொரு விசேஷம், மதவெறிகொண்ட யானையால் இறந்த துர்ப்பாக்கியரின் பிரேத தகன கருமாதிச் சடங்குகள் செவ்வனே நடக்கும்படி தாங்கள் தயைசெய்து பார்த்துக்கொள்ளுங்கள். இவற்றிற்கு வேண்டுஞ் செலவுக்கு நம் பொக்கிஷத்திலிருந்து கொடுங்கள். இறந்தவர்கள் குடும்பங்கள் இனித் துன்புற்று வருந்தாதபடி தாங்களே தக்க ஏற்பாடுகளுஞ் செய்வீர்களாக'' என்று சொல்லித் தம் அரண் மனை போய்ச் சேர்ந்தனர்.

பிறகு, ஜனங்கள், அவ் வாலிபனால் நீங்கிய ஆபத்திற்காக, அவனுக்கு நன்றி கூறிப் போகிறவர்கள்போல அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். "வாசிப்பவர்களே! அவ்வாலிபன் யாவன்? நம்முடைய வீர தீர புருஷனாகிய அநந்தராய் தான் என்று அறி வீர்களாக.''

XX

மறுநாள், இராஜா தோடார்மால், அநந்தராயைச் சக்கர வர்த்தியின் கட்டளைப்படி திவானியின் கச்சேரிக்குக் கொண்டு போயினர். சுதான்யரும் அவனுடன் சென்றனர். அநந்தன் அன்று காலையில் பாதுஷாவினால் நன்கொடையாக அனுப்பப்பட்ட விலை யுயர்ந்த மிகு அலங்காரமுள்ள நெட்டங்கியை உடுத்திக்கொண் டான். அவன் மிக்க மரியாதையுடன் சக்கரவர்த்தி சமுகத்தை யணுகிக் கிரமப்படி தலைவணங்கிப் பணிந்தான். அவன், தன்னு டைய வாட்படையைச் சக்கரவர்த்தியாரிடங் காட்டினன். அதனை அவர் தன் கையாற்றொட்டுப் புன்னகைசெய்து "சுத்த வீரனே! இவ் வாசனத்தில் உட்காரு; எம்முடைய வேலை முடிந்ததும், வங்கா ளத்தைப்பற்றி நாம் உன்னிடம் பேசவேண்டி யிருக்கின்றோம்'' என்றார்.

சக்கரவர்த்தி, தமது அரசியல் வேலை முடிந்ததும் அநந்தன் பக்கந் திரும்பிப் பார்த்தனர். உடனே அவன் எழுந்து நின்றான். அவனை அவர் உட்காரச்சொல்லி "இப்போது வங்காளத்தைப் பற்றி நாங்கள் உன்னிடமிருந்து கேட்க விரும்புகிறோம். சுதன்ய மால் உன்னைப்பற்றி எம்மிடம் விசேடமாகச் சொல்லியிருக்கின் றார். உண்மையில் உன்னுடைய துணை வலியால், வங்காளத்தில் மொகலாயர் செங்கோலைத் தாபிக்கக் கூடுமென்று நாம் நினைக் கின்றோம்'' என்றனர்.

அதற்கு அநந்தன் "இராஜ ராஜேஸ்வரா! கட்டளையானால், என்னுயிருக்கு ஆபத்து நேர்வதா யிருப்பினும், இராஜ கட்டளையை நிறைவேற்றுவேன்" என்று தாழ்மையுடன் கூறினன்.

"நீ அவ்வாறே செய்வாயென்று எனக்குத் தெரியும், அரசாங்கத்தைத் தாங்கிநிற்குந் தம்பங்களில் நீயு மொரு தம்ப மாய். நாம் உன்னை நம்புகிறோம். நீ எத்தனை யுத்த வீரர்களைக்கொண்டு, படானியரைத் துரத்தத் சக்தி யுடையவ னுவாயென்று நினைக்கின்றாய்?" என்று கேட்டனர் அக்பர்.

"தங்கள் மகிமாவது! வங்காளத்தில் படானியர், ஐந்நூறுண்டுகளுக்குமேல் அரசாண்டு வருகின்றனர். அவர்களை ஒரு நாளையில் ஒட்டிவிடலாமென் றெண்ணுவது கூடாத காரியம்" என்று பணிவுடன் கூறினன்.

"ஆம், அஃது உண்மைதான்" என்றார் சக்கரவர்த்தியார்.

"ஆனால், ஜனங்கள், படானியரால் பஞ்சும் படாத பாடுபட்டுச் சோர்ந்துபோ யிருக்கின்றார்கள். இன்னும் அவர்கள், அவர்கள் செய்யுங் கொடுமைகளுக்குப் பொறுக்கமாட்டார்கள். ஜனங்களெல்லோரும், தங்கள் மகிமாவது போன்ற தயாளுவான சக்கரவர்த்திக்குத் துணை புரிவதற்குப் பேராவலுடையவரா யிருப்பார்கள்" என்றான் அநந்தன்.

"வங்காளத்தில் வல்லமைசாலிகளான அநேக ஜமீன்தாரர்க ளிருக்கிறார்களென்றும், அவர்கள் பலத்த சேனைகளை யுடையவர்களென்றுங் கேள்வி யுற்றிருக்கின்றோம். அவர்கள், என் படானியரைத் துரத்தி, இந்து இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கலாகாது?" என்று கேட்டனர்.

"என்னிறைவரே! என்னுடைய தேச ஜனங்கள் ஒருங்கு சேர்ந்து வேலைசெய்யத் தெரியாதவர்கள். அவர்கள் சுய காரியப் புலிகள். "பேரறிஞர் தாக்கும் பிறர் துயரந் தாங்கியே, வீரமொடு காக்க விரைகுவா ரல்லர்." தேச ஜனங்களில் பலர், சுதேசிகளென வாய்ஞானம் பேசிப் பிறதேசத்தாருடைய நடையுடை பாவனைகளை மேற்கொண்டு தங்கள் மனம் போனவாறு நடக்கின்றனர். தேசாபிமான மில்லாதவர்கள். ஐக்கியமென்னும் வியாபாரச் சரக்கை வங்காளத்தில் பெறுவதற்கில்லை. ஜனங்களின் நிலைமை இவ்வாறிருப்பதால், மேன்மைதங்கிய தங்களைப்போன்ற தரும குணமும் நடு நிலைமையுமுள்ள சக்கரவர்த்தியின் நீழலில் வசிப்பதற்கு அவர்கள் உவப்புறுவார்கள்" என்று பதிலுரைத்தான்.

"எத்தனை யுத்த வீரர்க ளிருந்தால், படானியரை வங்காளத்திலிருந்து துரத்தவும், அங்கே மொகலாயர் ஆட்சியைத் தாபிக்கவும் உன்னாற் கூடும்?"

“படானியரை வங்காளத்திலிருந்து ஒரு நாளில் அல்லது ஓராண்டில் துரத்துவது சாத்தியமான தல்ல. ஆனல், பதினயிரம் பேரால் படானியர் தலைவரை, அவருடைய தலைநகரி விருந்து யான் துரத்திவிடக் கூடும்.”

“உன்னுடைய வீரச்செயலை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். நீ இன்றையதினமே உன்னுடைய பதினயிரஞ் சேனையுடன் வங்காளத்திற்குச் செல்லவேண்டும். சுதன்யமால், ஹுசேன்கான் இவர்க ளொவ்வொருவரும் ஐயாயிரம் படைவீரர்களுடன் உன்னேடு வருவார்கள்” என்ருர் சக்கரவர்த்தி.

“என்னிறைவரே! தங்கள் மகிமைதங்கிய சேவையில், என்னுயிரையும் பலியிடுவேனென்று எல்லாம் வல்ல இறைவர்மீது ஆணையிட்டுச் சொல்லுகின்றேன்.”

“வீரவானே! உன் கருமத்தின்மேற் கண்ணுயிரு. புறப்படு சீக்கிரம். படானியரைத் துரத்தி, நீதியுங் கருணையும் நிறைந்த எனது சிங்காதனத்தை ஸ்தாபிக்கக் கடவாய். ஆனல், ஜனங்களுக் குரிமையான சுவாதீனத்தில் மாத்திரம் தலையிடாதே” என்ருர்.

பிறகு சக்கரவர்த்தியார், அநந்தன் விரலில் தம் பெயர் பதிந்துள்ள ஓர் விலையுயர்ந்த மோதிரத்தை யிட்டு, நாம் உன்னை வங்காளத்திற்கு முதல் சுபேதாரராக நியமிக்கின்ருேம்” என்று சொல்லித் தமது கொலுமண்டபத்தை விட்டகன்ருர்.

(இன்னும் வரும்.)

அன்பு

(நாமக்கல் து. கோபாலய்யங்கார் எழுதியது.)

இத் தொல்லுலகில் ஆறறிவு படைத்த அனைவரும் அடையத் தகுந்த அரிய குணங்களுள் அன்பு முதன்மையானது. கற்ருரே யல்லாது எல்லாரும் கஷ்ட நஷ்டங்களின்றி கண்ணுக்கெதிரே தமக்குத் தோன்றுஞ் சீவராசிக ளொவ்வொன்றிடத்தும் தயையுடன்-பக்ஷத்துடன் பழகிவருவதே இதன் உட்கருத்தாகும். கருணையென மாறு பெயர் படைத்த இவ்வரும்பொருள் கண நேரத்தில் கன்னெஞ்சரையும் இளகிடச்செய்து கண்ணீர் சொரியுமாறு செய்யும் வல்லமைபொருந்திய தேவாமிருத மாகும். ஆக நாமனைவரும் வாழ்க்கை நலங் கோரிய விடத்து நமக்கு இன்றியமையாத ஊன்று

தமிழ்நாடு ... காப்பக நூலகம்
20359

கோலாக இதனை அடையவேண்டு மென்பதை யிங்கு குறிப்பிட்டோம்.

தந்தை தாய் தமயன் தங்கைமார் பாரியாள் புத்திர பௌத்திர ரடங்கிய ஒரு பெரிய குடும்பத்தில் இகபர சாதனங்களை யுற்றவண்ணம் இனிது வாழ்ந்தின்ப மெய்தலின் காரணமாக முன்னிற்பதுவும் இதுவே யாம். இது இடத்திற்கேற்ற பேர், காலத்திற்கேற்ற கோலம் என்ப புத்திர வாஞ்சை சகோதர வாஞ்சை, என்று திரிந்தும் விளங்கும். உலகத்தா ரனைவரும் நட்பினரெனும் நாமம் படைத்து அன்புக் களஞ்சியமாக விளங்குவதுண்டு. மணவினையாலோ அல்லது மற்றெவ்வித வாஞ்சையாலோ ஈருடலும் ஒருயிரு மாகி நிழலும் நீரும் பூவும் மணமும்போ லிணங்கியும் நிற்கச் செய்வது இப் பேரன்பே யாகும் என்பது அனைவரு மறிந்ததே.

அன்பென்பது சாந்த குணத்தின் அன்பு என்று கூசாமற்கூறலாம். ஏனெனில் கருணையிலார் நெஞ்சம் கன்னெஞ்சம் என்றும் தெளிவாக அறியக் கிடக்கின்றது.

"இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம் வன்சொலாலென்று மகிழாதே" என்றெழுந்த முதுமொழிப்படி இன்சொல்லும் உள்ளன்பும் இணைந்தே நிற்கின்றது. இனிமையான சொல்லும் சாந்தமு மில்லாதவிடத் தன்பில்லை. உள்ளன்பில்லை யானல் இன்சொல்லிற்கு ஏதுவே யில்லை. ஆபத்துகளிலும் அடையவொண்ணுத் துன்பங்களிலும் நாம் அல்லற் படும்போது நம தாவியும் உடலும் பற்றி யெரிந்து வருந்தித் தயங்கி நிற்பதை யெண்ணுங்காலேனும் அதனுட்கருத்தை யுன்னி "கடவுள் படைப்பில் உயர்வு தாழ்வில்லையென் றில்லாமலிருப்பதால் கடவுளின் அருமை மக்களனைவரையும் ஜீவஹிம்ஸை செய்யாதபடி நடந்துகொள்ள வேண்டும். கூன் குருடு செவிடு முதலானோர்களும் ஊமை, நொண்டி முதலானவர்களும் நமது அன்பிற்கே அருகதையானவர்களென்று தீர்மானித்துக் கூடிய மட்டும் சரீரப் பிரயாசையோ மற்றெவ்வித உபகாரமோ செய்யத் தவறலாகாது. பிணியாளரும் பெண்பாலரும் அல்லலுற்றபொழுது அன்பால் ஆதரிப்பது அனைவரின் முதற் கடமையாகும்.

மற்றைய சீவராசிகளின் நிலைமைகளைக் கண்டு பரிதபித்துப் பராமரிக்கவேண்டுவது மக்கள் கடமை.

"கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம் அஃதின்றேற்
புண்ணென் றுணரப்படும்" எனவும்.

"கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா லுண்டிவ் வுலகு"

THE REGISTRAR
28 JUL 1926

எனவும் . பெரியார் கூறியது சிந்திக்கத் தக்கது. ஏழைகள் பசியால் வருந்துங்காலும் வாயற்ற பிராணிகள் நீரருக அலையும்போதும் உண்டுடுத்து உல்லாசமா யுலவிவருவதற்கு ஒருவரும் சம்மதியார்—சகிக்கமாட்டார் என்பதே எமது துணிபு. "கொல்லாமை' முன்னின்று" என்றபடி எத்தகைய ஜீவராசிகளையும் வாழவிட்டு விளையாடி வரப் பார்க்காத கண்கள் புண்களேயாகும். "அகிம்ஸா பரமோ தர்மஹ:" என வடமொழி யொன்று முண்டு.

"அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்"

என்பது கவனிக்கத்தக்கது.

இதனலல்லவோ சகல ஜீவகோடி ராசிகளுக்கும் தாயுந் தந்தையுமாய் விளங்கும் பெரும்பொருளான சிவமே அன்பு மயம், அன்பே சிவம் என்றும் கூறியுள்ளார்.

ஆதலால் நமது உற்றார் உறவினரேயன்றி அனைவரிடமும் அன்புகொண்டு வாழ்ந்து வருவோமாகில் அகிலாண்டகோடிக் கதிபனன ஆதி முதல்வன் தண்ணரு ளளிக்கத் தயங்குவரோ?

பாரிஜாதப் பரிமணம்.

"நண்பர் நிரூபங்கள்"

(மதுரை திரு. வீ. மு. பொன்னையா எழுதியது.)

கடிதம் க.

சிரஞ்சீவி அ. சா. துரைராஜூ,
போதனமுறைப் பாடசாலை;
தரங்கை.

அன்பார்ந்த நண்ப!

என் வணக்கங்கள் பல. அன்பு வடிவாய ஆண்டவ னருளான், ஆண்டும், ஈண்டும் நலமே மல்குக.

நீ எழுதிய, 27—6—24-ம் தேதிக் கடிதம் இன்று கிடைக்கப்பெற்று, அளப்பரிய ஆனந்தங் கொண்டேன். எவ்வாறு போய்ச் சேர்ந்தாயோ, ஏதேனும் இக்கட்டு நேர்ந்து விட்டதோ வெனப் பெரிதும், கவலையும், ஐயமுங் கொண்ட மனத்

தினனு யிருந்த எனக்கு, உனது கடிதத்தில், "எல்லாம் வல்ல கடவுள் தன் தண்ணருளால், எவ்வித இடுக்கணும், அசுகமுமின்றி, ஆங்கு இன்பமே சார்ந்தேன்" என்ற செய்தி காணப்பெற்றதும் நான் அடைந்த கழிபேருவகை கழறற்பால தன்று. ஆனல் அடுத்த விநடியில், இன்பம், துன்ப மாகிறது. என்? எஞ்ஞான்றும், என்னருகிலேயே யிருந்து, மகிழ்ச்சி யூட்டிவந்த உன்னை, நான் இது போழ்து பிரிந்திருப்பதால், அடையும் ஏக்கமும், விசனமுமே யன்றிப் பிறிதெதுவு மன்று. போசன வேளை தவிர, மற்ற வேளைகளில் இணைபிரியாதிருந்த நாம், இதுபோது, பிரிந்திருப்பதெனில் யாங்ஙனம் இயலும்? நீ, என்னைவிட்டுப் பிரிந்த அன்று முதல் இன்று வரையும், உணவு, உறக்கம், வேலை, மகிழ்ச்சியாதியவைகளில், ஒரு சிறிதும் கொள்ளவில்லை யென்பதை உனக்கு உண்மையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இரவும், பகலும் உனது உருவம் எனது அகக்கண்களில் நின்று, என்னைப் பெரிதும் துன்புறுத்துகிறது. அறிவுரை கூறி—அன்பே வடிவாய்—குணமணியாய் என்றும் என்னைவிட் டகலாதிருந்த உன்னை, இன்று பிரிந்திருப்பதில் ஏக்கம், துக்கம் முதலியவை உண்டாகாது பின் என்ன செய்யும்? எனது நிலையேபோன்று, "அசலுக்குச் சரியான நகல்" போல, ஆங்கு நீயும் அவதியுறுவதை உனது விகித மூலமா யறிந்து, நிரம்பவும் சஞ்சலிக்கிறேன். என்செய்வது? கடவுளின் அருள் அதுவேபோலும்! அருட் கடவுளே, நின்னருள் இருந்தவாறு என்னே!

விதியின் வலியை விலக்க எவரா லியலும்? நளச்சக்ரவர்த்தி, தமது வளநாட்டையும், செல்வத்தையும் சூதால் தோற்று, தன் இன்னுயிர் மனைவியையும் மக்களையும் பிரிந்து, உருக்குலைந்து, சேவகத்தொழில் பூண்டு அவதியுற்று இறுதியில் இன்புற்ற கதை நீ அறியாத தல்ல. ராமர் வனம் புகுந்து, தமது மனைவியை யிழந்து, ஆஞ்சநேயர் ஆதியோர்களின் சகாயத்தால் ராவணனைச் சம்ஹாரஞ்செய்து இறுதியாக நாடு பெற்றதற்குக் காரணம் என்ன? அரிச்சந்திரன், பஞ்சபாண்டவர் ஆகியவர்கள் பட்ட பாடு நீ படித்ததுதான். இவர்கள் மட்டுந்தானே? எல்லாம் வல்ல ஈச்சுரனுங் கூட, வில்லாலும், கல்லாலும், பிரம்பாலும் அடிபட்டுள்ளாரெனின், கேவலம் நாம் ஒரு பொருட்டோ.?

ஆகவே, நாம் வீணுக வருந்திக்கொண்டிருப்பதில் பயனில்லை. "கடவுள் நம்மிருவரையும் ஓர் நன்மைக்காகவே, தற்காலம் பிரித்து வைத்துளார்" என எண்ணி மனதைத் திடப்படுத்தி இன்புறுவதே அறிவுடைமை யாமென இது போழ்து எனது மனம் அறிவுறுத்துகிறது. எனவே, இக் கடிதம் கிடைக்கப்பெற்றது முதல் வருந்தாது மனதைத் திடப்படுத்திக்கொள்ளுமாறு விழைகிறேன்,

நான் உனக்குத் திங்கட் கிரு நிருபங்கள் தான் வரைய வியலும். அவற்றில் உனக்கும், எனக்குமான சில புத்திமதிகளை ஏதோ எனது சிற்றறிவிற் கெட்டியவரை எழுதிக்கொண்டு வருவேன். அவற்றை ஒரு முறைக்குப் பன்முறையாக வாசித்து அவற்றில் கூறியபடியே கடனாற்றுமாறு மிக மிக அன்பாய் வேண்டிக் கொள்ளுகிறேன்.

அன்பே!

நீ, தினசரி செய்யவேண்டிய கடமைகளில், எதை மறப்பினும், கடவுளை என்றும் தினமொரு வேளையாவது மன தார வணங்க மறந்துவிடாதே. நம்மைப் படைத்த வரும், வேண்டுவன எல்லாம் அளிப்பவருமாகிய இறைவனை, நாம் தினமொரு வேளையாவது வணங்கா திருப்போமாகில், நாம் உயர்ந்த உயிர் என்று கூறப்படும் மக்க ளினத்தைச் சேர்ந்தவர்களாவது யாங்ஙனஞ் சாலும்? மாக்க ளினத்தை யன்றோ சேர்ந்தவர்களாவோம். எனவே, நீ என்றும் கடவுளை மனதார வணங்கு. இதுவே நான் உன்னிடம் வேண்டும் முதல் வரம். இறைவனை எவ்வாறு வணங்குதல் வேண்டும் என்று கூறினேனோ, அதேபோல உனது பெற்றோரையும், திக்குநோக்கித் தெண்டனிடு. பெற்றோரினுஞ் சிறந்த உற்றார் பிறி தெவ ருளர்? ஐயிரண்டு திங்களாய், அங்கம் நோகப் பெருந்துன்பத்துடன் சுமந்து, இறுதியில் யமவாதை என்ன லாம்படியான பிரசவ வேதனைப்பட்டுப் பெற்ற அன்னையின் அன்பை என்னென்பேன்! பாலபாடம் கற்பிப்பது நம் இனிய தாயா ரன்றோ? தமது, ஊண், நித்திரை, சுகம் ஆகிய எல்லாவற்றையு மிழந்து, தமது இன்னுயிர் மக்களின் சுகம் ஒன்றையே நாடி, அதனால் அவர்கள் அடையும், தேக சிரமத்தையும், பொருட் செலவையும் என் னொருவனின் நாவால் இயம்பற் கியலுமோ? என்னே அன்னையின் அன்பு இருந்தவாறு! பிள்ளை பிறந்த முதலாக, புத்திரனின் உணவு, உடை, கல்வி, நன்னடக்கை யாதிய வற்றிற்காகத் தந்தையார் எடுத்துக்கொள்ளும் கவலையை எந்தவிதமாய்க் கூறப்போகிறேன்! இத்தகைய இரு முதுகுரவர்க்கு நாம் என்ன விதமான கைம்மாறு செய்யினும் அவர்களின் நன்றிக்கு ஈடாமோ? எனவே, கனவிலும், நனவிலும் பெற்றோரை வணங்க மறந்துவிடாதே. பிறரால், "ஆ! என்னே இப் பையனின் நுண்ணறிவு! இவனைப் பெற்றவர்க ளன்றோ பாக்கியசாலிகள்" என்று கூறும் வண்ணம் நடந்து கொள்வாயானால் அதனாலாவது நம் பெற்றோர் இரும்பூ தெய்தக் கூடும். உனது, ஆசிரியரிடம், தாழ்மை, பயபக்தி விசுவாசத்துடன் நடந்து கொள். கண்ணிலார்க்குக் கண் கொடுப்பதேபோல, உனது ஆசிரியர் உனக்கு "அறிவு" என்ற கண்ணைக் கொடுப்பதால், அவ

ருடைய பெருந்தகைமைக்கு நீ என்றும் கடமைப்பட வேண்டியது அவசியமெனக் கூறவும் வேண்டுமோ? பாடசாலையில் பயிலும் நேரங்களில், நீ ஏதேனும் தவறுசெய்து விடும்போது, உன்னை, அடிப்பதும், கடிவதும் உனது நன்மைக்காகவே செய்கிறாரென்பதை இனிதுணர்ந்து, அவர்க்குப் பணிவாய் நடந்துகொள். அவ்வாறின்றி, நேர்மாறாய் வெறுப்புடனாவது, சினத்துடனாவது கடனாற்றிவிடாதே. அன்றன்று பாடங்களை நன்றாய்ப் படித்து ஆசிரியர்க்கு நல்லவனாய் நடந்துகொள். உன்னோடு பயிலும் மாணவர்களுடன் சகோதர பாவமாய் நடந்துகொள். துன்மார்க்கரிடம் என்றும் சிநேகம் வைத்துக்கொள்ளாதே. துன்மார்க்கரிடம் நட்புறுவதால் உண்டாம் அளவற்ற தீமைகளைப்பற்றி நான் உனக்கு ஒன்றும் கூற வேண்டியதில்லை. இரவு காலங்களில் அதிக நேரம் விழித்திராதே. எவ்விடத்திற்கும் செல்லாதே. பசுவின் பால் கிடைக்குமாயின் படுக்கைக்குப் போகுமுன்னர் பருகல் நலந்தருவதாகும். அதனால் திடகாத்திரமும், அறிவும் பிற நலங்களும் விளைகிறதென்பது ஆன்றோர் கண்ட அனுபவம். படுத்துக்கொண்டு அநாவசியமான விடயங்களைச் சிந்தியாதே. ஏதேனும் நன்மை கொடுக்கத்தக்க ஓர் விடயத்தை ஆராய்ச்சி செய். சென்ற காலங்களில் நிகழ்ந்த தீமைகளை எண்ணி வருந்தாதே. அதிகாலையில் நித்திரைவிட்டெழுந்தவுடன், கடவுளையும், பெற்றோரையும் வணங்கிக்கொண்டு மலசலங் கழித்துப் பின்னர், தேகாப்பியாசம் செய்துகொண்டு, துநீராடிக்கொள். அன்றைய பாடங்களை ஓர் அமைதியான இடத்தி லமர்ந்து மிகுதியும் கவனமாயும், வேறு எண்ணமின்றியும் பல முறை படித்து மனனம் செய்துகொள். பாடசாலை துவங்குவதற்கு ஒரு நாழிகைக்கு முன்னரே சென்றுவிடு. பாடசாலையில், ஆசிரியர்க்கு வெறுப்பை யளிக்கத்தக்க வினாக்களையும், அநாவசியமானவற்றையும் கேட்காமல், உனக்குத் தெரியாதவற்றை மட்டும் மிக்க பக்தி வினயத்துடன் கேட்டுத் தெரிந்துகொள். பாடசாலையிலிருக்கும் நேரங்களில், வேறு எவ்விதமான எண்ணங்களையும் நினையாமல், ஆசிரியர் போதிக்கும் பாடங்களைக் கவனத்துடன் கேட்டு அதன்படி நடக்கப் பிரயாசைப்படு. எவ்வுயிர்களிடத்தும் அன்பா யிரு. அநாவசியமாக வார்த்தையாடுவதை விட்டொழி. பிற பின்.

மாலைப்பொழுது

(ரா. ராமகிருஷ்ணன் எழுதியது)

மணி 5 அடிக்க 10-நிமிஷங்க ளிருக்கும். பாடசாலை முடிந்து வீடு திரும்பினேன். நாள் பூராவையும் பள்ளிக்கூடத்தின் இருட்டறைகளில் கழித்ததால் களைப்புண்டு, புத்தகத்தை வெறுப்புடன் எறிந்துவிட்டு, சிற்றுண்டி கொண்டு, மேற் துண்டுடன் வெளிப்புறப்பட்டேன். தெற்குச் சாலையின் வழியே நேராகச் சென்றேன். எங்கு செல்வதென்ற நிச்சயம் ஒன்றும் இல்லை. காற்று சுகமாக வீசிக்கொண்டிருந்தது. அநேக ஆலமரங்களும், சிற்சில இடங்களில் அரச மரங்களும் ஆகாயத்தை அளாவி வளர்ந்திருந்தன. அவைகளிலிருந்து பழுப்பு இலைகள் மெதுவாக ஊசலாடி விழுந்து கொண்டிருந்தன. பட்டணத்தின் சத்தமும் கூக்குரலும் மெதுவாகக் காதில் விழுகின்றன. ஆல மரத்தில் வெகு உயரத்தே யிருந்து தொங்கும் விழுதுகள் தலையை மெதுவாக தடவிக் கொடுத்தன. வெயிலும், நிழலும் மாறி மாறி தேகத்தில் பட்டது. ஆகாரத்திற்காக வெகு தூரம் சென்றிருந்த பறவைகள் தங்க ளிருப்பிடம் திரும்பின. அன்றைய தினம் சுதினமாகக் கழிந்ததற்கும், தங்கள் குஞ்சுகளை ஆகாரத்துடன் திரும்பச் சந்திக்கும் ஆனந்தத்தினாலும், அவைகள் ஆரவாரித்தன. உயரே இருந்து விழும் பழுப்பிலைகள், சிற்சில சமயம், மரங்களினிடையே வருகின்ற கதிரவன் கிரணங்களின் ஒளி பட்டுத் தங்க மயமாயின. சுகமாய், மெதுவாய் அழகாய் வீசும் தென்றல் தேகத்தின் சிரமத்தை நன்றாய் போக்கிற்று. துண்டை ஒரு தோளில் போட்டுக்கொண்டு ஒரு உண்மை ஹிந்துவைப் போலவே திறந்த தேகத்துடன் தென்றலை அணைந்தேன். எவ்விதத்திலும் மேன்மை பொருந்திய நம் பரதநாட்டில் பண்டைக்காலம் முதற்கொண்டே, மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள ஏகத்வம் வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆதலால் ஆனந்தமாய் வீசும் அத்தென்றல், தன்னினும் வேறாக என்னை எண்ணவில்லை. எனக்கும் அவ்வித உணர்ச்சி உண்டாகவில்லை ஒரு ஹிந்துவின் மனம் இயற்கை வசமாவது ஆச்சரியமே யல்ல. இந்தியாவின் புராதன மேன்மைக்கும், ஜாஜ்வல்யத்திற்கும் சாக்ஷியாய் என்றும் அழியாது நிற்கும் உபநிஷத்துக்கள் இதே உண்மையை எவ்வளவு அழகான அருமை வாக்கியங்களில் கூறுகின்றன! ஆனால் மேனாட்டினர்கள் இதை அறிந்தானந்திக்க முடியாது. ஆங்கில கவிகளுள்—அவர்களிற் பலர் அபூர்வ சக்தி வாய்ந்தவர்களே—19ம் நூற்றாண்டில் வசித்த வோர்ட்ஸ்வோர்த் என்றவரே இயற்கையைப் பற்றிய வரையில் ஹிந்து கொள்கையை அறிந்து ஆனந்தித்தார். ஆனால் அவர் காலத்தில் அவர் கவித் திறமையை அறிந்தோர் வெகு சிலரே. அவர் வேதாந்தத்தைப் பலர் ஏசினர். அவர்

கவிதைகள் வெகு அழகானவை. அகில புவனம் யாவும் அவருக்கு ஆனந்த மயமாகத் தோன்றியது. பரம்பொருளே இயற்கையாக மாறியிருக்கிறார் என்று நம்பினார் அவர். மேகங்களும், சிறு செடிகளும், வயலில் வேலை செய்யும் சிறு பெண்களும், அவர் மனத்தைக் கொள்ளை கொண்டு விடும். அவர் ஓரிடத்தில் 'வஸந்த வனத்திலிருந்து வரும் ஒரு சக்தி, நமக்கு மனிதனைப் பற்றியும், நன்மை தீமையைப் பற்றியும், ஞானிகளைவிட அதிகம் கற்பிக்கும்' என்கிறார். ஆனால் இன்னும் சிலர் 'அது எங்ஙனம் முடியும்' என ஆச்சரிய முறுகின்றனர். வரவர அவர் பெருமை பலரால் அறியப்பட்டு அவர் 'வேதாந்தத்தின்' உண்மையும் மேனாட்டாரால் அங்கீகரிக்கப்படும் என்றே நாம் நம்புவோம்.

* * * * *

ஆ! இவ்வளவு தூரம் வந்துவிட்டோம்! மரத்தின் கிளைகள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருப்பதால் கீழே விடும் நிழல் கட்டம் கட்டமாய் விழுகிறது, பட்டணத்திற்குச் சென்றுவிட்டுக் குஷாலாய் பாரதி பாடல்களையும் தேசீய கீதங்களையும் பாடிக் கொண்டு வீடு திரும்பும் வண்டிக்காரர் சிலர்! கூலிவேலை செய்து விட்டுத் தூரத்திலுள்ள தங்கள் ஊருக்குத் திரும்பும் வெள்ளாளப் பெண்டிர் சிலர்! தங்களுக்குக் கிடைத்ததைக்கொண்டு திருப்தி யடையும் இவர்களன்றோ சுகவாசிகள்! எவ்வளவு கிடைத்தாலும் போதாதென்று சதாகாலமும் மனோ நிம்மதியின்றி அலையும் பதர்களுக்கு ஆயுள் பூராவும் சுகம் எங்கிருந்து வரும்!............ இதோ ஒன்றுக்கொன்று இரண்டு கஜ தூரத்திற்குள் புல்மேயும் அவ்விரு ஆடுகளும் மனதிற்கு எவ்வளவு ரம்மியமா யிருக்கின்றன! இக் கள்ளம் கபடமற்ற பிராணிகள் தங்கள் வாழ்நாட்களை எவ்வளவு சுகமாய் கழிக்கின்றன? மனிதனுக்கு மட்டும் வாழ்க்கை வேறு விதமேனோ? மனிதனுக்கு மட்டும் வாழ்க்கைக்காகச் சண்டையும் சச்சரவுமே முக்கியமானவைக ளாகின்றன! இயற்கைத்தேவி மனிதனுக்கு எவ்வளவு உண்மைகளைக் காண்பித்து நீதி கற்பிக்கின்றனள்..........அதோ அம்மர நிழலில் ஓர் சிறு மணற் குன்றின்மேல் உட்கார்ந்துகொண்டு சிறு புல்லாங்குழ லொன்றை ஊதும் அச்சிறு இடையன் இயற்கைத் தாயின் அழகை இன்னும் அதிகப்படுத்துகிறான். அவன் முகத்தில் கவலையின் களங்கம் சற்றேனும் இல்லை. மனிதர் பலருள் ஆட்டிடையனைச் சுகவாசி என்று எதோ ஒரு கவி கூறியிருக்கிறாரே!

இந்தச் சாலை நேர் மேற்கே போகிறது! சற்று தெற்கே திரும்பி நாம் ஆற்றுப் பக்கம் போவோம். போகும் வழி யெல்லாம். சமீபத்தில் வந்த பெரு வெள்ளத்தின் காரணமாக, மணற் படிந்திருக்கிறது. இரு பக்கத்திலும் தென்னை மரங்கள் அளாவி வளர்ந்

திருக்கின்றன. கீழே பல செடி கொடிகளால் செய்யப்பட்ட அநேகம் புதர்கள். அவைகளில் அணில் முதலிய சிறு பிராணிகள் குதித்து விளையாடுகின்றன. இதோ நதி தீரம். கோடைகாலமானதால் பத்து கஜ அகலத்திற்குத் தான் ஜலம் ஓடுகிறது. சலசலவென்று பாறைகளின்மீதும் கற்களின்மீதும் விழுந்து ஓடும் நதி உயிரற்றதாகவோ தோன்றுகிறது! கரேலென்று, தரைவரை பார்க்கக்கூடியதாய், மெதுவாய், அழகாய்ப் புன்சிரிப்புடன் சிங்கார நாட்டியம் செய்து கொண்டு ஓடும் இந்நதி உணர்ச்சியற்றதென்று எவன்தான் கூறுவான். 'மனிதன் இதிலிருந்து உண்மைகளை அறியலாம்' புத்தகங்களிலிருந்து அறிவதைவிட, 'கற்களிலிருந்தும், மரங்களிலிருந்தும், அதிக மறியலாம்' என்பது மிக்க உண்மையே! இதனுள்ளே, சிறுசிறு மீன்கள் சுளுவாய் நீந்தி ஜலத்தின் அழுக்கை. விலக்கி நமக்கு எவ்வளவு நன்மை புரிகிறது! ஆனால் செய் நன்றியற்ற மனிதனே அவைகளை இம்சிக்கத் துணிகிறான்! எனினும் மனிதனே யாவற்றிற்கும் மேலாம்!

என் துண்டை மணல்மீது விரித்து, அண்ணாந்து படுத்தேன். சூரியன் வெகு வேகமாய்க் கீழிறங்குகிறான். ஆகாயம் அவ்விடத்தில் சரிவாயிருப்பதால் அவ்வளவு வேகத்துட னிறங்குகிறானெனத் தோன்றுகிறது. மேற்கு வானம் சிவந்து விட்டது. அச்சிவப்பு வரவர காந்தியில் மங்கிக்கொண்டே சுமார் கால் வானம் வரை பரவிவிட்டது. அண்ணாந்து படுத்திருந்த எனக்கு, ஆகாயம் பூராவும் கண் முன் இருந்தது. அப்பரந்த விரிந்த வெளியைக் கண்ட எனக்கு விவரிக்கமுடியா உணர்ச்சி ஒன்று உள் புகுந்தது. உள் பூராவும் பரவியது. 'அங்கிங் கெனாதபடி எங்கும்' வியாபித்திருக்கும் இதன் மாக்ஷிமை என்னே! அப்பரந்த நிலத்தி னிடையிற் சிற்சில இடங்களில் குறுக்கிட்ட வெள்ளைப் பிரதேசங்கள் தாமரையோடையை ஒத்து அதன் மாக்ஷிமையை இன்னும் அதிகப்படுத்திற்று. எப்பக்கத்திலும் பச்சைப் பசேலென்று இருக்கும் மரக் கூட்டங்கள் ஆகாயத்தை ஊடுருவி மேக மண்டலத்தை அடையப் பேரவா கொண்டுள்ளவை போல் வளர்ந்திருந்தன. சமீபத்தில் அநேகம் பாக்கு மரங்களும் சவுக்கு மரங்களும், ஒல்லியாய் ஆனால் ஒழுங்காய் வளர்ந்திருந்தன. மேகங்களால் மூடப்பட்ட சிகரங்களுடன் அநேக மலைகள், வெள்ளையுடன் கலந்த நீலநிறமாய், உயர்ந்தும் தாழ்ந்தும், பூமிக்கு மதிற்சுவர்கள் போல எழும்பி யிருந்தன.

சூரியன் மறைந்து விட்டான். கொஞ்சம் கொஞ்சமாக இருள் பூமியை அடைய ஆரம்பித்தது. பகலின் சப்தங்கள் யாவும் அடங்கி ஜலம் ஓடும் சப்தம் மட்டுமே காதிற் படுகிறது. அது ஸங்கீத த்வனி போல் மிக இனிமையாகப் புகுகிறது. ஆகாயமும் கரேலென

நிறம் பெற்றது. சிற்சில இடங்களில் மேகங்கள் லேசாக நகர்ந்து கொண்டிருந்தன. ஒவ்வொன்ருய் நக்ஷத்திரங்கள் உதிக்கத் தலைப் பட்டன. இருளில் அவைகள் ஒளியுடன் மின்னின. "தாழ்ந்த உலோகங்களின் மத்தியில் வைடூரியம் ஜ்வலிப்பதைப் போல பிரகாசித்தன. அப்பரந்த கரிய வானத்தில் கணக்கில்லாத சிறு தாரகங்கள் சிறு நாழிகைக்குள் இங்கொன்று அங்கொன்ருய் ஆகாயம் பூராவும் பரவின. பூவாதிருந்த சிறு தும்பஞ்செடியில் மாசற்ற வெள்ளைப் புஷ்பங்கள் கொல்லென்று பூத்தாற்போ லிருந்தது அக்காட்சி. முன்பே என் மனதில் படர்ந்திருந்த விவரிக்க முடியா உணர்ச்சி இரு மடங்காயிற்று. என் உணர் சக்தி அப்பரந்த காட்சியினூடே சென்று அதனுடன் லயமாய் விட்டது. என்னே மாக்ஷிமை! என்ன மேன்மை! மாசில்லை, கபடமில்லை, குற்றமில்லை கவலையில்லை!......சிலவற்றைக் காட்டிலும் மற்றவை அதிக ஒளி பெற்றிருக்கின்றன. இங்கிருந்து நோக்கும்போது, ஒன்றுக் கொன்றுள்ள தூரம் சில அடிகளைப் போல் தோன்றினும், உண்மையில் அவைகளிடையே எவ்வளவு மைல்களோ! இவைகள் ஒவ்வொன்றும் ஒரு கிருகமேயோ! ஆமாம்! யாரோ ஒருவர், இதில் ஒரு நக்ஷத்திரம் சூரியனைவிட ஒளி மிக்கதெனச் சொன்னரே! அது உண்மையோ? பூமி மாதிரி அதிலும் ஜீவ வாழ்க்கை யுண்டா?......... ஆ! ஆ! இவை யாவையும் படைத்துக் காக்கும் அகில புவன சர்த்தாவை என்னவென்று துதிப்பேன்! என் மனத்துள்ளே அவரைத் தொழுதேன். என் உள்ளம் பூரித்தது. ஆனந்தம் என்னுட் புகுந்து என்னையாட் கொண்டது. தென்றல் நன்ருய் வீசிற்று. காற்றில் கிளைகள் அசைவது காதிற் பட்டது. என் ஆனந்தத்தை பூர்த்தி செய்யச் சந்திரன் தோன்றிற்று. மூன்ரும் பிறை— மாசற்ற முகார விந்தத்தில் தவழும் புன்சிரிப்பை யொத்திருந்தது. என் மனம் அசைவற்றது; ஆனந்த லோகத்தில் ஐக்கியமாய் நின்றது. உலகத்தை மறந்தேன், இயற்கையுடன் ஒன்ருயினேன். அகம் நசித்தது.

....

ஆ! தாலுக்கா கச்சேரியில் மணி 7 அடித்தது! அப்பொழுதே ஆற்று மணலில் படுத்திருக்கும் உணர்ச்சி வந்தது. எழுந்து பராபரமாய் நிற்கும் ஈசனுக்கு மாலை வந்தனத்தைச் செலுத்திவிட்டு திரும்பினேன்.

இரவு போஜனம் உண்டு நிச்சல மனத்துடன் படுத்துறங்கினேன். அன்றிரவு முழுதும் ஆனந்தமான கனவுகள் அநேகம் என்னைக் களிப்பித்தன.

ஓம் தத் ஸத்:

சிட்டானு குமாரன்

(ஒரு சிங்களக் கதையின் சுருக்கம்)

ஸ்ரீமான் அ. ச. அருணசல ரெட்டியார் எழுதுவது

ஒரு சிங்களப் பெரியார் ஒரு சமயத்தில் "முன் கோபம்" கூடாதென்பதைப் பற்றி எம்மிடம் ஒரு கதை கூறினர். அது முன் கோபத்திற்கு மட்டுமல்ல; முன்னுலோசனை, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்காததன் குற்றம் முதலியவை களையும் தெளிவாகக் காட்டுகிறது.

பண்டைக்காலத்தில் பதினெட்டு நாடுகளி லொன்று யிருந்த சிங்கள நாட்டில் பர்ணுஸ்புரம் என்ற ஓரூரில் சிட்டானு என்ற ஒரு பெரிய தனவந்தன் இருந்தான். அவனுடைய பொருள்கள் ஒரு பெரிய குடும்பத்திற்கு ஏழு பிறப்பிற்குப் பிழைக்கப் போதுமானதா யிருந்தது. (அப்பொருளைக் கணக்கிட முடியாதிருந்ததனுல் இவ் விதம் கூறப்பட்டது போலும்,) அவ்வளவு பொருளை வைத் திருந்த அச்சீமானுக்கு ஒரு கவலையும் இருக்கக் கூடாதெனினும், அவனை ஒரு கவலை மாத்திரம் அதிகம் வாட்டி வந்தது. அக்கவலை யாதெனின் அவனுக்கு ஒரு குழந்தையில்லா திருந்த குறையே.

> "பொறையிலா வறிவுபோகப் புணர்விலா விளமை.........
> போலுஞ் சேயிலாச் செல்வ மன்றே" (வளையாபதி)

என்பதற் கிணங்க எவ்வளவு பொருளிருப்பினும், ஒருவனுக்குத் தன் காதுக்கு இனிமையாக மழலைச் சொற்களைக் கூற—தானுண் ணும் சோற்றில் அதன் இளங்கைகள் பட—தான் களைப்படைந்து அல்லது துக்கத்தி லிருக்கும்பொழுது தன்னை மகிழ்விக்க ஒரு குழந்தை இல்லாவிடின், அவனுக்கு அவ்வளவு பொருளிருந்தும் யாது இன்பமுண்டு. அவன் எவ்வளவு போக மனுபவித்தும் என் செய்வது? அன்றியும் புதல்வ ரில்லாதவர்க்குப் "புத்" என்ற நரகமன்ரே கிட்டும். இதனுலேயே அவனுக்கு அத்தகைய கவலை மேலிட்டது. உலக அனுபவத்தைப் பாருங்கள்! பணக்காரர் களுக்கு ஒரு குழந்தையுமே பிறப்பதில்லை. ஆனல் அன்றைய உணவிற்கே தாளம் போடும் ஒரு ஏழைக்கோ அவனுல் வைத்துப் பாதுகாக்க முடியாத எத்தனையோ நஞ்சானுங் குஞ்சானுமாய்ப் பத்தும் பதினைந்துமாகப் பிறந்து விடுகிறது. உலக அனுபவம் இப்படி யிருக்க அந்தச் சிட்டானு சீமானுக்கு ஒரு குழந்தை கூட இல்லாதிருந்ததைப் பற்றி நாம் வியப்படைதல் மிகை யாகும். நாட்கள் பல சென்ற பின் அத்தனவானுக்குப் புண்ணியவசமாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது. வெகு நாள் பட்டினி கிடந்த ஒருவ

னுக்கு ஒரு கவளச் சோறு கிடைத்தால் எவ்வளவு ஆவலாயும் மகிழ்ச்சியாயும் இருக்குமோ அது போல் அந்தச் சிட்டானுக்கும் இருந்தது.

அக்குழந்தைக்கு ஐந்து வயதானவுடன் அவனைத் தந்தை பள்ளிக்கு வைக்காமல், "நமக்குத் தான் இவ்வளவு திரவியம் இருக்கிறதே, நம் குழந்தை படிக்கா விட்டா லென்ன?" என்று அசட்டையா யிருந்துவிட்டான். நாளடைவில் அப்பிள்ளையிடம் உரம் வைத்த செடி வளர்வது போல பற்பல தீய நடத்தைகளும் மிக்க செழிப்பாய் வளர்ந்து வந்தன. எப்பொழுது பார்த்தாலும் சூது விளையாடுவதே பெரும் வேலையாகக் கொண்டிருந்தான். சூதாட்டப் பழக்கம் உண்டாகவே அதன் நண்பனை குடிப் பழக்கமும் தொடர்ந்து வளர ஆரம்பித்தது. "அறும்பு ஏற ஏறக் குறும்பும் ஏறும்" என்பது போலப் பிராயம் ஏற ஏற வேசி வீட்டுப் பழக்கமும் அதிகரிக்க ஆரம்பித்தது. இப்படியே தந்தை சம்பாதித்த பொருளில் கால் பங்கு வரை செலவு செய்து விட்டான். ஆனல், தன் மகன் இவ்விதம் செய்வது அந்தச் சிட்டானுக்கு மிக்க மகிழ்ச்சி யளித்து வந்தது. நாம் சம்பாதித்த தெல்லாம் செலவழிப்பதற்குத் தானே பிள்ளை வேண்டும் என எண்ணி மகிழ்ந்தான்.

இப்படி யிருக்க அச்சீமானுக்குக் கிழப் பருவம் கிட்டியதால் அவன் தன் குமாரனை அழைத்து, "என்னருமை மகனே! எனக்குக் காலங் கிட்டி விட்டது. ஆதலால் இதோ உனக்கு யான் நான்கு செய்யுள்கள் எழுதித் தருகின்றேன். நான் சம்பாதித்த பொருளெல்லாம் முடிந்து விட்டால் நீ இந்தச் செய்யுள்களை மனப்பாடம் பண்ணிக்கொண்டு எவரிடத்திலுங் கூறுவாயாகில் அவர்கள் உனக்கு வேண்டிய பொருள் தருவார்கள். இப்படியே நீ பணம் சம்பாதித்துப் பிழைக்கலாம்." என்று அச்செய்யுள்களை எழுதிக் கொடுத்து விட்டுச் சிறிது நாளில் இறந்து விட்டான்.

தந்தை இறந்த சில நாட்களில் எழு பிறப்புக்கு உதவக் கூடிய அப்பொருள்களை ஒரு பிறப்புக்கும் போதாமல் செய்து விட்டான் அச்சிட்டானு குமாரன். பிறகு அவன் உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க நிழலு மின்றி நாயா யலைந்து திரிந்தான்.

இவன் இப்படி அலைந்து கொண்டிருந்த நாளில் ஒரு நாள் பிரமதத்தன் என்னும் ஒரு அரசனின் குமாரன் தன் னெதிரே வருவதைக் கண்டான். அப்பொழுது பசிப்பிணியால் வருந்திக் கொண்டிருந்த இவனுக்கு தன் தந்தை எழுதிக் கொடுத்த செய்யுள்கள் நினைவிற்கு வந்தன. அதைக் கூறியாவது இவ்வரச குமாரனிடம் ஏதாவது பொருள் பெறலாம் என எண்ணி அவ்

வரச குமாரனை நோக்கி "அரசே! எனக்கு நான்கு செய்யுள்கள் தெரியும். அதைச் சொல்லுகிறேன். எனது பசிக் கொடுமையைத் தீர்த்துக் கொள்ளத் தாங்கள் ஏதாவது பொருள் உதவ வேண்டும்." என வேண்டிக் கொண்டான். அப்பொழுது அச் செய்யுள்களைக் கூறும்படி சொன்னான் அவ்வரச குமாரன்.

பிறகு சிட்டானு குமாரன் அவ்வரச குமாரனைப் பார்த்து அச் செய்யுள்களைக் கூறத் தொடங்கினான், அவையாவன :—

(1) தங்கத்தாலான ஆசன மாயினும் ஒரு நாளும் உட்காராத ஆசனமாயின் உட்காரக் கூடாது.

(2) ஒருபோதும் உண்டிராத உணவை அமிர்தமாயினும் உட்கொள்ளக் கூடாது.

(3) ஒருபோதும் படுத்திராத படுக்கையில் படுத்தால் உடனே தூங்கிவிடக் கூடாது.

(4) எவ்வித காரணங் கொண்டும் முன் கோபம் கொண்டு ஒருவருக்குத் தீங்கு செய்துவிடக் கூடாது. ஆராய்ந்தே தண்டனை அளிக்கவேண்டும்.

பிரமதத்த குமாரன் இதைக் கேட்டதும் "சரி! இவற்றின் உண்மைகளை உணர்ந்த பிறகே உனக்கு யான் பொருளுதவி புரிவேன். நீ என்னுடன் வரவேண்டும்." என்றான். அவனும் சம்மதித்தான். பிறகு இருவருமாகச் சென்றுகொண் டிருக்கையில் ஒரு பெரும் அடவியில் ஒரு அழகிய அரண்மனையில் ஓரழகிய மங்கையும் அவளுடைய தோழிகளும் இருப்பதைக் கண்டு அவ்வரண்மனைக்குள் சென்றனர். அவர்களைக் கண்ட அம்மங்கை அவர்களுக்கு ஆசன மளித்தாள். அப்பொழுது அரச குமாரன் அவளிட்ட ஆசனத்தில் உட்காரச் சென்றதைக் கண்ட சிட்டானு குமாரன் உடனே "ஒரு நாளும் உட்காராத ஆசனத்தில் உட்காரக் கூடாது" என்ற செய்யுளை அவனுக்கு நினை வூட்டினான். உடனே அரச குமாரன் தன்னிடமிருந்த ஒரு பிரம்பினால் அந்த ஆசனத்தைத் தட்டினான். திடீரெனப் பல வித அம்புகளும் ஈட்டிகளும் தரைக் கடியிலிருந்து மேல் நோக்கிப் பாய்ந்து வந்தன. அதைக் கண்ட அரசகுமாரன் "நீ கூறியது உண்மையே. ஆதலால் இதோ உனக்கு நூறு பொன் தருகின்றேன். பெற்றுக் கொள்" என அந்தச் சிட்டானு குமாரனிடம் அப்பொன்னை அளித்தான்.

பிறகு அம்மங்கை அவர்களுக்கு உண்டி அளித்தாள். அச் சிட்டானு குமாரன் "ஒரு நாளும் உண்ணாத உணவை உண்ணக் கூடாது" என்ற செய்யுளை நினை வுறுத்தினான். அரச குமாரன் உடனே அவ் வுண்டியில் சிறிது எடுத்து அங்கிருந்த ஒரு நாய்க்குப் போட்டான். அந்நாய் அவ்வுணவைப் புசித்த வளவிலேயே கீழே

விழுந்து இறந்துவிட்டது. உடனே இன்னும் சிறிது பொன்னை எடுத்து வெகுமதி யளித்தான்.

பின்னர் இருவருமாக அவ்வரண்மனையை விட்டுப் புறப்பட்டு அருகிலிருந்த ஒரு பட்டணத்திற்குச் சென்று அங்கு உணவருந்திக் களைப்பாறி யிருந்தனர். அச் சமயத்தில் தெருவில் ஒரு பெண்ணின் அழுகைக் குரல் கேட்டது. அவள் என் அழுகிருளென்பதை அவர்கள் அறிய மிக்க ஆவல்கொண்டு அங்கிருந்தவர்களை வினவினர். அவர்களில் ஒருவன் அவர்களை நோக்கி "ஐயா! இப்பட்டணத் தரசனின் புதல்வியை எத்தனையோ அரசகுமாரர்கள் மணமுடித்தும் அவர்க ளனைவரும் மணமுடித்த இரவிலேயே இறந்து விடுகின்றனர். அது என்ன காரணமெனவும் தெரியவில்லை. அவளுடைய தந்தை இப் பட்டணத்திலுள்ள ஆடவர்களை ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவராகத் தன் புதல்விக்குக் கணவராய் வரவேண்டு மெனக் கட்டளையிட் டுள்ளான். இன்று இங்கு அழுது கொண்டு செல்லும் பெண்ணின் மகன் செல்ல வேண்டிய முறையாதலால் அவள் தனது மகன் விடிவதற்கு முன் இறந்துவிடுவானே யென்ற துக்கத்தால் அழுது கொண்டு செல்கின்ருள்" என்ருன்.

இதைக் கேட்ட உடனே அரச குமாரன் அங்கு அழுது கொண்டு செல்லும் மாதிடம் விரைந்து சென்று "அம்மா! உங்கள் மகனுக்குப் பதிலாக இன்று அவ்வரச குமாரியிடம் நான் சென்று மணமுடித்துக் கொள்கின்றேன். நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்ச வேண்டாம்." எனக் கூறினன்.

அம்மாது வேற்று நாட்டிலிருந்து வந்த நீர் என் மகனுக்காக என் உயிரைக் கொடுக்க வேண்டும்" என்ருள்.

அரசகுமாரன்—"இல்லை அம்மா! அவ்வரச குமாரியை எவ்விதமும் மணமுடிக்கக் கருதிவிட்டேன். அதனல் எனதுயிருக்கு இடுக்கண் வரினும் வருக என்பதே எனது துணிபு. இதனல் தங்களுக் கேதாவது துன்பம் வராது. தாங்கள் இதற்கு இணங்க வேண்டும்" என மிகவும் நயந்து வேண்டினன்.

அதற்கு அம்மாது—ஐயா! நீர் கைம்மாறு வேண்டாது வலிந்து இவ்வுதவி புரிய வந்ததற்காக யான் மிகத் தாழ்மையுடனும் நன்றியுடனும் வந்தனம் புரிகின்றேன். உம்மைப் பார்த்தால் ஓர் அரசிளங் குமரரைப் போல் தோன்றுகிறதே. நீர் எந்த நாட்டரசனின் செல்வப் புதல்வரோ? என் ஏழை மகனுக்காகத் தங்களுயிரை அளித்துக் காப்பதாகத் துணிந்து கூறுகின்றீர். உம்முடைய உயிருக்கு இன்னல் விளைவித்து என் மகனுயிரைக் காத்து என் செய்வது? அவனே பரம ஏழை. இவ்வுலகில் இனி இருந்தும் பய

னில்லை; இல்லாவிடினும் பயன் உண்டாகிவிடாது. நீரோ இன்னும் உலக வாழ்க்கையின் பயனை அனுபவிக்கவும் உலகத்தையே ஆளும்படி நேரினும் ஆளவும் சக்தி பெற்றிருக்கிறீர். அதிலும் தமது பெற்றோர் கண்காண விடத்து உயிர் துறந்திடுவீரேல் ஐயோ அவர்கள் படும்பாடு எவ்விதமாகுமோ? ஒரு வேளை உமக்காக அவர்கள் உயிர் விடவும் நேரிடுமே! ஒரு ஏழைக்காக ஒரு அரச குடும்பமே அழிவடைவதெனின் அந்தோ அப்பாபங்களெல்லாம் இவ் வெளியவளாகிய என் மீதன்றோ ஏறும்? எனவே தாம் இதில் தலையிடுதல் தகுதியன்று'' என்றிரந்தாள்.

அரசகுமாரன்—"அம்மா! யான் இரண்டுக்கும் துணிந்தே இக் காரியத்தில் தலையிடுகிறேன். "ஆறிலும் சாவு நூறிலும் சாவு'' தானே. எப்பொழுது பிறந்து விட்டோமோ பிறகு இறந்துதான் ஆகவேண்டும். பிறவுயிரைக் காப்பதற்காகத் தன்னுயிரை விடுவதன்றோ அரச தருமம். என் அரச தீரத்தைவிட்டு நான் பயங் கொள்ளியாயிருப்பின் வெட்கம்! வெட்கம்! அதைவிட வெட்கம் வேறுண்டோ? ஒருவன் உலக போகங்களை அநுபவிப்பதற்காகத் தன்னுயிரைப் பிறவுயிருக்காக விடப் பயந்தால் அது அதற்கு மேல் வெட்க மன்றோ?

"பலதிரண்ட செல்வத்தைப் பார்க்கிற் கனவாம்
மலருதிர்ந்தாற் போலிளமை வாடுஞ்—சில நிகழ்ந்த
மின்னொக்கும் வாழ்நா ளிவையிற்றை மெய்யென்றிட்
டுன்னிக் களிப்பா ருளர்.'' (பாரதம்)

என்பதற்கிணங்க நாம் நடப்பது அழகன்று. யான் எனது அரச தருமப்படி நடக்கவேண்டும். உமது குமாரனுக்குப் பதிலாக யானே சென்று வருகிறேன். யான் இறந்தாலும் பிழைத்தாலும் என்னோடேயே போகட்டும்.'' என்று பல விதமாகக் கூறவே அவள் ஒருவாறு இணங்கினாள்.

பின்னர், அன்று மாலையில் அரசனது அரண்மனைக்குச் சென்று அவ்வரச குமாரியை மணமுடித்துக்கொண்டு இரவில் அவளுடன் படுக்கையறைக்குச் சென்றான். அப்பொழுது அருகிலிருந்த சிட்டானு குமாரன் தனது அரசகுமாரனை நோக்கி "ஒரு நாளும் படுத்திராத படுக்கையில் படுத்தால் சீக்கிரத்தில் தூங்கிவிடக் கூடாது'' என்ற செய்யுளை நினைவூட்டினான். அரகுமாரன் அதை ஏற்றுக்கொண்டு சிட்டானு குமாரனை ஓரிடத்தில் படுக்க வைத்துவிட்டுத் தாமிருவரும் பஞ்சணை மஞ்சத்திற் கேகினர்.

படுத்த சிறிது நேரத்தில் அரசகுமாரி உறங்கிவிட்டாள். அரசகுமாரன் மாத்திரம் தன் நண்பன் கூறிய செய்யுளை நினைத்துக்கொண்டே வெகுநேரம் உறங்காது விழித்துக்கொண் டிருந்தான்.

சிட்டானு குமாரன்

இரவு பத்து நாழிகை ஆய்விட்டது. அரசகுமாரியோ கும்ப கர்ணத் தூக்கம் தூங்குகின்ருள். தனக்கோ தூக்கம் கண்ணேச் சுழற்றித் தலையை மயக்குகின்றது. தூங்குவோமென்றால் நண்பன் கூறிய செய்யுள் முன்னுல் வந்து தடுக்கிறது. நிகரில்லா அழகுடைய ஒரு மங்கையின் அருகில் சயனித்திருக்கும் ஒரு இளங்குமரனை மாரன் வாட்டாது விடுவனே? பரம்பொருளாகிய பரமசிவக் கடவுளையே வாட்ட எண்ணிய மாரன் ஒரு வாலிபனை இலேசிலே விடுவானே? நம் மரசகுமாரன் காதற் குறியுடன் அவ்விள மங்கையின் அழகிய முகத்தை உற்று நோக்கினுன். ஏதோ அவள் நாசித் துவாரத்திலிருந்து நூல்போல வெளி வந்து கொண் டிருந்தது. அது வெளியே வர வரப் பெரிதாகிக் கொண்டே வந்து ஒரு பெரும் பாம்பாய்த் தோன்றிற்று. கண்டான் அரசகுமாரன் திடுக் குற்ருன். "இப் பாம்புதானே இத்தனை மக்களேயும் நாள் தோறும் தீண்டிக் கொன்று வந்தது. இவ்விதந்தான் அவர்களெல்லாம் மாய்ந்திருக்கவேண்டும்." என்று மனத்தி லெண்ணிக் கொண்டு தனது வாளை யுருவி வெளியி லெடுத்து ஒரே வீச்சாக அக்கொடிய பாம்பை வெட்டித் துண்டஞ் செய்தான். உடனே அது இறந்து விழுந்தது. அதன் உடலை மஞ்சத்தின் கீழ் எடுத் தெறிந்தான். "நம் நண்பன் கூறியது சரியாயிற்று!" என வியப் படைந்தான். அச்சமயத்தில் அவ்வரசகுமாரி திடீரென விழித்துப் பார்த்த அளவில் தனது கணவன் இறந்து விடாமலிருக் கண்டு பெருங் களிப்படைந்து தனதாசை நாயகனைத் தழுவி யணைந்து முத்த மிட்டாள். பிறகு அரசகுமாரனும் தழுவி முத்தமிட இருவரும் மையல்கொண்டு அன்றிரவு முழுதும் ஆனந்தமா யிருந்தனர்.

விடிந்து சிறிது நேரமாகி விட்டது. காக்கைகள் கத்துகின்றன. சிலர் ஒரு பிணந்தூக்கும் பல்லக்கைச் சுமந்து கொண்டு அரண்மனை வெளிவாயி லருகில் வந்து நின்றனர். படீரெனக் கதவு திறக்கப்பட்டது. திடீரென அரசகுமார னெழுந்து வெளியில் வந்தான். அரசகுமாரியும் அவனைத் தொடர்ந்து வெளியே வந்தாள். அங்கு காத்திருந்தோ ரெல்லோரும் பேராச்சரிய முற்றனர். உடனே அரசருக்கு இதை அறிவித்தனர். அரசனும் ஆச்சரியமடைந்து தம்பதிகளை எதிர் கொண் டழைத்தான். அரசகுமாரன் பல்லக்குக்காரர்களை அழைத்து மஞ்சத்தின்கீழ்க் கிடக்கும் பாம்பின் உடலை அப்பல்லக்கி லேற்றிச் செல்லுமாறு பணித்து நடந்தவற்றை அங்கு நிறைந்திருந்தோ ரனைவருக்கும் விளம்பினுன். அனைவரும் கேட் டானந்தித்தனர்.

சிறிது நாளில் அப்பிரமதத்த குமாரனுக்கு அரசன் தனது அரசை அளித்துப் பட்டஞ் சூட்டினுன். வெகு நாள் சென்று பிரமதத்த குமாரன் தன்னூர் செல்லக் கருதிப் பரிவாரங்களை

நிறுத்தித் தானும் தன்னுருயிர் நண்பனும் மாத்திரம் தனது நாட்டை நோக்கிப் புறப்பட்டுச் சென்றூர்கள். அரசகுமாரன் தன் பெற்ரோரிடம் செல்லும்பொழுது அவனுடைய அரசியாகிய நமது அரச குமாரி கர்ப்பவதியாய் இருந்தாள்.

இது இவ்விதம் நிற்க. பிரமத்த குமாரனும் சிட்டானுகுமாரனும் தம் நாடு சென்று அங்கு சில காலம் தங்கி யிருந்து பிறகு உலகச் சுற்றுப் பிரயாணஞ்செய்ய உன்னிச் சென்று விட்டனர்.

கர்ப்பவதியாயிருந்த அரசகுமாரி பத்துத் திங்களுஞ் சென்று ஓர் நந் நாளில் ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தாள். அது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. "தந்தையினுஞ் சிறந்த மைந்த ருளர்." என்ற மொழிக்கிணங்க அப்பிள்ளை தனது தந்தையினும் நற்குணமுடையவனுய் விளங்கினுன்.

பல ஆண்டுகளாகியும் உலகப் பிரயாணஞ் சென்ற இருவரும் நாடு திரும்பின ரில்லை. அம் மைந்தனும் ஓர் பால குமாரனுகி விட்டான். வெகு நாட் சென்ற பின் ஓர் நாளிரவில் இருவரும் (அரசகுமாரனும் சிட்டானு குமாரனுமாகத்) தனிமையாய் அரண்மனை வந்து சேர்ந்தனர். அச்சமயத்தில் அரண்மனைக் காவலாளருங் கூடச் சிறிது தூங்கி விட்டனர். இருவரும் உட்புகுந்து சென்ற பொழுது நமது அரசகுமாரியும் மற்ரோர் இளைஞனுமாக அரண்மனை யுள்ளே சயனித்திருந்ததைக் கண்டனர். இதைக்கண்ட நமது பிரமதத்த குமாரன் வெகு ஆத்திரமுங் கோபமுங் கொண்டு தன் நண்பனை நோக்கிப் "பார்த்தாயா, நண்ப! இவ்வரண்மனையில் வேருெரு கணவனை வைத்துக்கொண் டிருக்கிருள். கணவனுக்குத் துரோகஞ் செய்யும் இல் கூற்றன்ரு இவள்? இவளை இதோ இரு துண்டாக்கி எமனுல கேற்றுகின்றேன்" என்று பற்கள் நெற நெறவென்று கடிபட, மீசைகள் துடிபட, உதடுகள் கடிபட, கண்கள் சிவக்க வாளை ஓங்கி வெட்டத் துணிந்தருகிற் செல்ல எத்தனித்தான்.

அதைக்கண்ட சிட்டானு குமாரன் "முன்கோபம் கொள்ளக் கூடாது" என்ற செய்யுளைக் கூறித் தடுக்க, அவன் சினந்தணிந்து யாது செய்வதென்று வினவினுன். அதற்குள் அரசகுமாரியும் விழித்தெழுந்து உடனே கணவனை வணங்கி நின்ருள். இதற்குள் அப்பால குமாரனும் விழித்தெழவே அவள் தனது குமாரனுக்கு அவன் தந்தையாகிய நம் அரசகுமாரனைக் காட்டி, "இதோ! உன் தந்தை வந்திருக்கிருர்" எனக் கூறினுள். அவனும் தன் தந்தையைத்தொழுது வணங்கி நின்ருன்.

இவற்றை யெல்லாம் அரசகுமாரன் கவனித்துத் தன் மனைவி மீது கடுகளவுங் குற்றமில்லையென அவள் முகத்தினின்று அறிந்து

கொண்டான். "அவிர் மதிக்குப்போல, மறுவுண்டோ மாதர் முகத்து" என்பது திருக்குறண் மொழியன்றோ? அன்றியும் "புன் கதிர் கையுறு முவகையாற் பணியுங் கற்பினோர்" என்று கந்த புராண முரைத்தவாறு அவள் பணிந்த விதத்தையு மறிந்து மன மகிழ்ந்து தன் நண்பன் கூறிய செய்யுளின் பெருமைகளையும் உணர்ந்து அச்சிட்டானுகுமாரனைத் தன்னுயுட்காலம் வரை தனது நற்பெருந் தோழனுய்க் கொண்டு சுகமே வாழ்ந்து வந்தான்.

சுபம்.

இன்கவித் திரட்டு.

[ஸ்ரீமான் அ. ச. அருணசல ரெட்டியார் திரட்டியது]

அருட்பா

1 தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்த நறுந்தேன் பெய்து பசும் பாலுந் தெங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொரு தீம் பருப்பிடியும் விரவி
இனித்த நறு நெய் யளைந்தே யிளஞ்சூட்டி னிறக்கி
எடுத்த சுவைக் கட்டியினு மினித்திடுந் தெள்ளமுதே
அனித்த மறத் திருப் பொதுவில் விளங்குநடத் தரசே
அடிமலர்க் கென்சொல் லணியா மலங்க லணிந்தருளே.

(ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள்)

உபதேசம்

2 ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு,
உயர்செல்வ மெல்லாம்
அன்றென்றிரு, பசித்தோர் முகம்பார்,
நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு, நடு நீங்காமலே,
நமக் கிட்டபடி
என்றென்றிரு, மனமே! உனக்கே
உபதேச மிதே!

(பட்டினத்தடிகள்)

இன்சொல்

3 புன்சொல்லு மின் சொல்லும் பொய்யின் றுணர்கிற்பார்
வன்சொல் வழியராய் வாழ்தலும்—உண்டாமோ
புன்சொல் விடர்ப்படுப்ப தல்லால் ஒருவனை
இன்சொல் விடர்ப் படுப்பதில். (பழமொழி)

பிறவாதிருக்கும் வழி

4 பொய்யாமை பொன்பெறினும் கள்ளாமை மெல்லியலார்
வையாமை வார்குழலார் நச்சினும்—நையாமை
ஓர்த் துடம்பு பேருமென் றானவா யுண்ணுனேல்
பேர்த் துடம்பு கோட லரிது. (ஆன்றோர்)

அரசன் கடமை

5 மாநிலங் காவல னென்பான் மன்னுயிர் காக்குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந் தீர்த் தறங்காப்பா னல்லனோ. (ஆன்றோர்)

கெட்டுப் போபவர்

6 நிட்டூரமாக நிதிதேடு மன்னவனும்
இட்டதனை மெச்சாஇரப் போனும்—முட்டவே
கூசினிலை நில்லா குலக் கொடியுங் கூசிய
வேசியுங் கெட்டு விடும். (ஔவையார்)

காக்கையின் நற்குணம்

7 காலை எழுதல், காணுமலே புணர்தல்,
மாலை குளித்து மனைபுகுதல்,—சால
உற்றாரோ டுண்ணல், உறவாட லிவ்வாறும்
கற்றாயோ காக்கைக் குணம், (ஆன்றோர்)

அறிஞர் செய்யும் ஆண்மைகள்

8 மாதர்க் கிதங்கவி வாணர்க்குச்சால வணக்கங் குரு
நாதர்க்கு நீதியோடா சாரங் கல்வி நயந்தவர்க்குக் [வில்
கோதற்ற வாசகம் பொய்க்குப்பொய் கோளுக்குக் கோளறி
ஆதற் கிரட்டிப் பறிவுடையோர் செய்யு மாண்மைகளே.
(ஆன்றோர்)

உழவுக் கினியவை

9 ஏரும் இரண்டுளதாய் இல்லத்தில் வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்—ஊரருகே
சென்றுவர எளிதாய்ச் செய்வாருஞ் சொற் கேட்கில்
என்றும் உழவே இனிது! (ஔவையார்)

பெண்ணு யமைப்பத் தக்கவள்

10 அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்—வன்னமுக
வேசி துயிலும் விறல் மந்திரி மதியும்
பேசி லிவை யுடையாள் பெண். (நீதி வெண்பா)

முயற்சி செய்வோரின் இயல்பு

11 மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையுமேற் கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். (ஆன்றோர்)

கல்வியின் சிறப்பு

12 அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. (குமரகுருபர சுவாமிகள்)

பொய்சொல்வதன் தீமை.

13 இம்மை நலனழிக்கும் எச்சங் குறைபடுக்கும்
அம்மை யருநரகத் தாழ்விக்கும்—மெய்ம்மை
அறந்தேயும் பின்னு மலர் மகளைநீக்கும்.
மறந்தேயும் பொய்யுரைக்கும் வாய். (சிறுபஞ்சமூலம்)

மக்கட் சிறப்பு.

14 பொன்னுடைய ரேனும் புகழுடையரேனுமற்
றென்னுடையரேனு முடையாரோ—இன்னடிசிற்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லாத வர். (நளவெண்பா)

பிறர்மனை விரும்பும் தீமை.

15 அணங்கு நோயெவர்க்குஞ்செய்யு மனங் கஞ லலைப் புண்டாவி
உணங்கினருள்ளஞ் செல்லு மிட னறிந்தோடிச் செல்லா
குணங்குல னொழுக்கங் குன்றல்கொலை பழி பாவம் பாரா
இணங்கு மின்னுயிர்க்கு மாங்கே யிறுதிவந்துறுவ தெண்ணு—
(ஆன்றோர்)

ஈசன் செயல்.

16 ஒன்றை நினைக்கி னது வொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாது முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல். (ஔவையார்)

பாழானவை.

17 நீறில்லா நெற்றி பாழ் நெய்யில்லா உண்டிபாழ் .
ஆறில்லா வூருக் கழகு பாழ்—மாறில்
உடற்பிறப்பிலா வுடம்பு பாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை. (ஆன்றோர்)

விழலானவை.

18 மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபமன்
ஞடில்லான் செங்கோ னடாத்துவதும்—கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டு
விருந்தில்லான் வீடும் விழல். (ஔவையார்)

பொது விஷயங்கள்.

இரண்டு தலைகளும் நான்கு கைகளும் நான்கு கால்களும் உள்ள 19-வயதுள்ள ஓர் மாது திருவனந்தபுரம் கண்காட்சி சாலையில் தினம் ஒன்றுக்கு ரூபா 100-க்கு குறையாமல் சப்பாதித்து வருகிறாளாம்.

* * * *

இங்கிலாந்தில், பி. ஏ, எம். ஏ, படித்துத் தேறியுள்ள சிலர் போலீஸ் சேவகர்களாக (கான்ஸ்டேபிள்) அமர்ந்திருக்கிறார்களாம். காரணம், போலீஸாரை அங்குள்ளவர் நன்கு மதிக்கிறார்களென்பதே. மேலும் போலீஸார் அங்கு ஜனோபகாரிகளாக இருந்து ஜனங்கள் பிரியத்தைச் சம்பாதித்திருக்கின்றனர் என்றும் சொல்லப்படுகிறது.

* * * *

சுமார் ஒரு வருடமாகப் புருஷனைப் பிரிந்து தனித்து வாழ்ந்து வந்த லெண்ட்மட்ரிட் என்னும் தாதி பம்பாயில் ஒரு நாள் ஒரு ஆட்டக்கச்சேரிக்கு போயிருந்தாள். அச்சமயம் அவள் புருடனும் அந்த ஸ்தலத்திற்கு வந்திருந்தான். இருவருக்கும் வாக்கு வாதங்கள் நடைபெற்றன. அதன் பயனாக புருஷன் மனைவியைக் குத்திக் கொன்று விட்டானாம்.

* * * *

தினம் ஒன்றுக்கு 8-மணி நேரம் வேலை செய்வதைப்பற்றியுள்ள வாஷிங்கடன் ஒப்பந்தத்தை உறுதிசெய்யும் மசோதா சென்ற ஜூன்மீ 4௳ ஜனப்பிரதிநிதி சபையில் நிறைவேறியது. அதற்கு 111 பேர்கள் சாதகமாகவும் 3 பேர்கள் பாதகமாகவும் ஓட் கொடுத்தனர்.

* * * *

ஜாவாவுக்குக் கிழக்கேயிருக்கும் கமோடோ எனும் தீவில் பழைய காலத்தைச் சேர்ந்த ஒரு விதமான இராட்சதப் பல்லிகள் இருக்கின்றனவாம். அவை 2 அடி நீளம். அவைகள் தங்கள் வால்களால் எதையும் எதிர்த்து சண்டைசெய்யும் சக்தியுடையனவாம். இதுவரை யாரும் உயிருடன் அவைகளைப் பிடித்ததில்லையாம். ஆனால் அவைகள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனவாம். அவைகள் அமெரிக்காப் பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட வேண்டுமென்று இரு அமெரிக்கர்கள் தம்பதிகளாக வந்திருக்கின்றார்களாம்.

* * * *

இந்தியாவிற்கு வடமேற்கிலுள்ள அல்வான் மலைப் பிரதேசத்திலுள்ள மோச்சின் என்னும் கிராமத்தில் 146 வயதுள்ள ஓர் கிழவி இருக்கிறாளாம். இந்த உலகத்திலேயே அவள் தான் வயது முதிர்ந்த கிழவியாம். அவ்விதமே உலகத்தின் பெரிய கிழவர் 150 வயதுள்ள இப்பொழுதும் வசித்து வரும் சரோருக்கா என்னும் துருக்கராம். இவர் தமது 142 வது வயதில் கடைசி முறையாக விவாகம் செய்து கொண்டாராம்.

விநோதச் செய்யுட்கள்.

ஸ்ரீமான் அ. ச. அருணாசல ரெட்டியார் எழுதியது.

1 "காக்கைக்காகா கூகை கூகைக்காகா காக்கை
கோக்குக்கூகா கைக்குக் கொக்கொக்கக்—கைக்கைக்குக்
காக் கைக்குக் கைக்கைக் காகா."

(இது காளமேகப் புலவர், அவரைக் "ககர வருக்கத்தில் ஒரு பாடல் பாடுக" வென்று சிலர் கேட்டுக்கொண்ட போது பாடியது.)

இதன் பொருள்.

காக் கைக்கு=காக்கைக் கூட்டத்திற்கு
கூகை=கூகைக் கூட்டம்
ஆகா=(பகற்காலத்தில்) ஆற்ரு
கூகைக்கு=கூகைக் கூட்டத்திற்கு
காக்கை=காக்கைக் கூட்டம்
ஆகா=(இராக்காலத்தில்) ஆற்ரு
கோக்கு=அரசர்க்கு
கூ காக்கைக்கு=பூமியைக் காத்தற்கு
கொக்கு ஒக்க=கொக்கை நிகர்த்து
கைக்கைக்கு=பகைவரை யழித்தற்கு (கால வாய்ப்பு வேண்டும்; அக் கால வாய்ப்பு இல்லையானல்)
காக்கு ஐக்கு=கற்பகச் சோலைக்குத் தலைவனாகிய இந்திரனுக்கும்
கைக்கைக்கு ஆகா=பகைவரை அழித்தற்குக் கூடாது

("ஆனந்த சாகர"த்தி லிருந்தெடுத் தெழுதப்பட்டது.)

["பகல் வெல்லுங் கூகையைக் காக்கை, யிகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது" என்னும் திருக்குறளை இங்கே அறிக.]

ஒரு புலவர் வறுமையால் பாடியது.

2 "கல் லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக் கத்தான் கற்பித்தானா?
இல் லைத்தான் பொன்னைத்தான் கொடுத்துத்தான்
என் னைத்தான் இரட்சித்தானா?
அல் லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்
நோவத்தான் ஐயோ எங்கும்
பல் லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவி யிற்ருன் பண்ணினானே."

210359

சென்னை-600